## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் தொல்லியல்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022 - 2023

### மானியக் கோரிக்கை எண். 29


**தங்கம் தென்னரசு**

தொழில் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2022

# அட்டவணை



| வ. எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | கலை மற்றும் பண்பாடு | 1–80 |
| 2. | அருங்காட்சியகங்கள் | 81–116 |
| 3. | தொல்லியல் | 117–213 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# கலை பண்பாட்டுத் துறை

# 2022 – 2023

## 1. முன்னுரை

கலையும், பண்பாடும் பாரம்பரியத்தை பாதுகாக்கவும், ஒரு அடையாளத்தை வடிவமைக்கவும், படைப்பாற்றலை வெளிப்படுத்தவும் உதவும் இன்பமயமான இரண்டு வழிகள். அவை வயது, இனம், மதம் என்ற எல்லைகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கின்றன. கலை என்பது ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு விழுமியங்கள், மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்களின் சித்தரிப்பு.

உலகின் மிகத் தொன்மையான நாகரீகங்களுள் ஒன்றின் தாயகமாகவும், மிக உயர்வான பண்பாட்டுப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டதாகவும் விளங்குவது தமிழ்நாடு. கலைகளின் புரவலர்களாகத்

திகழ்ந்த மிகச் சிறந்த மன்னர்களைப் பெற்ற பெருமைக்குரியது தமிழ்நாட்டு வரலாறு. அதன் விளைவாக வளர்ந்து பரிணமித்த தனித்துவமான திராவிட பண்பாட்டின் அடையாளச் சின்னமாக இன்று தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழக மக்களின் கலைத்துவத் திறமை அவர்களின் இசை, நாட்டியம், ஓவியங்கள், சிலைகள், சிற்பங்கள் மற்றும் பிரம்மாண்டமான ஆலயங்களில் வெளிப்படுகிறது. தமிழ்ப் பண்பாட்டை உயிர்ப்புடன் சித்தரிக்கும் பல பண்பாட்டு விழாக்களின் உறைவிடம் தமிழ்நாடு. நேர்த்தியான பரதநாட்டியம் முதல் துடிப்பான தப்பாட்டம் வரை தமிழ்நாட்டின் நடன வடிவங்கள் வனப்பும் வசீகரமும் கொண்டவை.

தமிழ்நாட்டு மக்களின் ஓவியத் திறமை எழில் மிக்க தஞ்சாவூர் ஓவியங்களில் மட்டுமின்றி சூரிய உதயத்தின் போது பெண்கள் தங்கள் வீட்டு வாசலில் வரையும் வண்ணக் கோலங்களிலும் வெளிப்படுகிறது.

தமிழ் மொழியின் மிகப் பழமையான நூலான தொல்காப்பியம் ஐவகை நிலங்களையும், அவற்றிற்குரிய வெவ்வேறு இசைகள் மற்றும் இசைக்கருவிகளையும் குறிப்பிடுவது தமிழ் சமுதாயத்தில் இசை வகித்த சிறப்பிடத்தை உணர்த்துகிறது.


வீரம், காதல், தன்மானம், விருந்தோம்பல், ஈகை, நேர்மை, மத சகிப்புத்தன்மை ஆகியவற்றின் எழில் மிக்க கலவையே தமிழ்ப் பண்பாடு. தமிழ் கலை மற்றும் பண்பாட்டின் பெருமைமிகு பாரம்பரியங்கள் பல தலைமுறைகளாகப் பாதுகாக்கப்பட்டு இன்றும் பெருமையோடு விளங்குகின்றன.

## 1.1 கலை பண்பாட்டு இயக்ககம்

கலை பண்பாட்டு இயக்ககம் இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. இணை இயக்குநர், மண்டல உதவி இயக்குநர்கள், கணக்கு அலுவலர்

மற்றும் துறையின் இதர அலுவலர்கள் கலை பண்பாட்டுத் துறை இயக்குநருக்கு உதவியாக செயல்பட்டு வருகின்றனர். மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், ஒரு அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, நான்கு அரசு இசைக் கல்லூரிகள், ஒரு அரசு நிதியுதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கலை பண்பாட்டுத் துறை கண்காணிக்கிறது.

## துறையின் படிநிலை (Hierarchy)



## 1.2 துறையின் நோக்கங்கள்

கலை பண்பாட்டுத் துறையின் நோக்கங்கள்:–

- தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தல்.
- தமிழ்நாட்டின் கலை வடிவங்களை பாதுகாத்தல்.
- தரமான கலை கல்வி வழங்கி தமிழ் கலை வடிவங்களுக்கு ஊட்டம் அளித்தல்.
- கலைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும், மேம்பட்ட பொருளாதார நிலையையும் உறுதிப்படுத்துதல்.
- நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- திறமைமிக்க கலைஞர்களுக்கு கலைக் காட்சிகள் நடத்த உதவியும், விருதுகள் வழங்கி சிறப்பித்தும் ஊக்கமளித்தல்.
- நேர்த்தியான தமிழ்க் கலை வடிவங்களை காட்சிப்படுத்த விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- பல்வேறு கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.

### 1.3 மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

துறையின் பல்வேறு திட்டங்களையும், செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்த உதவி இயக்குநர்களின் கீழ் ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை மண்டலங்களில் கலைப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கலைப் பயிற்சி, ஓவிய சிற்ப கலைக்காட்சிகள், நாட்டிய, நாடக மற்றும் இசைவிழாக்கள் ஆகியவற்றை நடத்துகின்றன. மாவட்ட கலை மன்றங்கள், மாவட்ட இசைப் பள்ளிகள், ஜவகர் சிறுவர் மன்றங்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியற்றின் நிர்வாகப் பணிகளையும் ஒருங்கிணைக்கின்றன.

| வ. எண் | மண்டலக் கலை பண்பாட்டு மையம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர். |
| 2 | சேலம் | சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி. |
| 3 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை. |
| 4 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர். |
| 5 | மதுரை | மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தென்காசி. |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர். |

கீழ்க்கண்ட பண்டிகைகளின் போது மாவட்டங்களில் கலை நிகழ்ச்சிகளை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் நடத்துகின்றன:–

| **வ. எண்** | **மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள்** | |
|---|---|---|
| 1 | **காஞ்சிபுரம் மண்டலம்**: | |
| | கார்த்திகை தீபம் | திருவண்ணாமலை மாவட்டம் |
| | ஆடிக்கிருத்திகை | திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| | மகா சிவராத்திரி | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | கோடை விழா | ஏலகிரி, திருப்பத்தூர் மாவட்டம் |
| | | ஜவ்வாது மலை, திருவண்ணாமலை மாவட்டம் |
| 2 | **சேலம் மண்டலம்** | |
| | கோடை விழா | ஏற்காடு, சேலம் மாவட்டம் |
| | ஆடிப்பெருக்கு விழா | தருமபுரி மாவட்டம் |
| | மாங்கனி விழா | கிருஷ்ணகிரி மாவட்டம் |

| வ. எண் | மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள் | |
|---|---|---|
| | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 3 | **தஞ்சாவூர் மண்டலம்** | |
| | சீர்காழி தமிழிசை மூவர் விழா | மயிலாடுதுறை மாவட்டம் |
| | இராஜராஜ சோழன் சதய விழா | தஞ்சாவூர் மாவட்டம் |
| | ஆழித்தேர் விழா | திருவாரூர் மாவட்டம் |
| 4 | **திருச்சிராப்பள்ளி மண்டலம்** | |
| | வைகுண்ட ஏகாதசி விழா | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | அருள்மிகு நந்திதேவர் திருக்கல்யாண விழா | திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம் |
| | திருநெடுங்குடி மகா சிவராத்திரி விழா | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | **மதுரை மண்டலம்** | |
| | கோடை விழா | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| | சித்திரைத் திருவிழா | மதுரை மாவட்டம் |

| வ. எண் | மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள் | |
|---|---|---|
| 6 | **திருநெல்வேலி மண்டலம்** | |
| | பாவை விழா | ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் |
| | சாரல் விழா | குற்றாலம், தென்காசி மாவட்டம் |
| | அருவித் திருவிழா | திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம் |
| | குமரித் திருவிழா | கன்னியாகுமரி மாவட்டம் |
| 7 | **கோயம்புத்தூர் மண்டலம்** | |
| | தீரன் சின்னமலை விழா | ஈரோடு மாவட்டம் |
| | ஆடிப் பெருந்திரு விழா | திருப்பூர் மாவட்டம் |
| | கோடை விழா | உதகை, நீலகிரி மாவட்டம் |
| | | வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம் |

**1.4 மாவட்டக் கலை மன்றங்கள்**

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கீழ் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்கள் அரிய கலைகளைப் பாதுகாத்தல், பாரம்பரியக் கலைகளை பரப்புதல், திறமையான கலைஞர்களை அடையாளம் கண்டு விருதுகள் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்கின்றன. மாவட்டக் கலை மன்றங்களின் வாயிலாக வழங்கப்படும் விருதுகள் :–

| வ. எண் | வயதுப் பிரிவு | விருதின் பெயர் | விருதுத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | 18 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை இளமணி | 4,000/– |
| 2 | 19 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை வளர்மணி | 6,000/– |
| 3 | 36 முதல் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலைச் சுடர்மணி | 10,000/– |
| 4 | 51 முதல் 65 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை நன்மணி | 15,000/– |
| 5 | 66 வயதிற்கு மேற்பட்டவர்கள் | கலை முதுமணி | 20,000/– |

கலைஞர்களின் ஒரே சீரான வளர்ச்சிக்காக வழங்கப்படும் பல்வேறு நிதி உதவிகளை எளிதாக பெறவும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறவும் கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. 31.3.2022 வரை 70,208 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.5 கலைக் கல்வி

#### 1.5.1 தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்

கலை தொடர்பான உயர் கல்வி வழங்கவும், மாநிலத்தில் உள்ள இசை மற்றும் கவின்கலைக் கல்லூரிகளின் கல்விச் சார்ந்த செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. 14.11.2013–இல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகச் சட்டம், 2013 இயற்றப்பட்டது. 2020 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு

டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் முதுகலைப் பட்டப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2015–2016–ஆம் கல்வியாண்டு முதல் முனைவர் பட்டப் படிப்புகள் துவங்கப்பட்டன. 2016–2017 மற்றும் 2018–2019–ஆம் கல்வியாண்டுகளில் முறையே வார இறுதி நாட்களில் ஓவியம் மற்றும் காட்சிவழி தகவல் தொடர்பு வடிவமைப்பு பிரிவுகளில் மூன்று ஆண்டு பகுதி நேர முதுகலைப் பட்டப் படிப்புகள் மற்றும் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) படிப்புகளும் துவங்கப்பட்டன.

கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்படும் நான்கு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளும், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகளும், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்

கலைக் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் திருச்சிராப்பள்ளி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகள் இப்பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி கல்லூரி மற்றும் 13 சுயநிதிக் கல்லூரிகளும் இப்பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன.

### 1.5.2 அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்; நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பு; இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு; குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

மேலும், மாலை நேர இசைக்கல்லூரி மையத்தில் குரலிசை, வீணை, வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.3 அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், தவில், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்; இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு; குரலிசை, பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் மாலை நேர இசைக்கல்லூரி மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.4 அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம், தவில் மற்றும் நாதசுரம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்; இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு; குரலிசை, வீணை, வயலின் மற்றும் பரதநாட்டியம் பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், மாலை நேர இசைக்கல்லூரி மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.5 அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் மற்றும் நாட்டுப்புறக்கலை ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்; நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப்

படிப்பு; இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு; குரலிசை, வீணை, வயலின் மற்றும் பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள்; குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகள்; இசையில் முனைவர் பட்ட ஆய்வு படிப்புகள் நடத்தப்படுகின்றன.

அரசு இசைக் கல்லூரி மாணவர்களை ஊக்குவிக்க மாதம் ரூ.500/– வீதம் 10 மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**1.5.6 மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்**

இசை மற்றும் கலைகளைப் பயிலும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்க 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை,

கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மாணவர்களை ஊக்குவிக்க அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.400/– வீதம் பத்து மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 1.5.7 அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியில் சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப் படிப்புகள்; சுடுமண் வடிவமைப்பு (Industrial

Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.8 அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்

கும்பகோணம், அரசு கவின்கலைக் கல்லூரியில் வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலை பட்டப் படிப்புகள்; வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.9 அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் மரபு கட்டடக் கலையில் பி.டெக்., (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக் கலையில் பி.எப்.ஏ., (கற்சிற்பம், சுதைச் சிற்பம், மரச் சிற்பம் மற்றும் உலோகச் சிற்பம்) (B.F.A. in Traditional Sculpture), மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலையில் பி.எப்.ஏ., (B.F.A. in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.10 கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி, கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் இசையில் முனைவர் பட்டப்படிப்பு; இசையில் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டப்படிப்பு; பரதநாட்டியம்,

குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்; பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்புகள் மற்றும் மூன்றாண்டு பட்டப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.6. தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

5 வயது முதல் 16 வயதிற்கு உட்பட்ட சிறார்களிடம் மறைந்துள்ள கலைத் திறமைகளை வெளிக்கொணர்தல் மற்றும் கலைப்பயிற்சிகள் வழங்குதல் ஆகியவையே ஜவகர் சிறுவர் மன்றத்தின் நோக்கமாகும்.

தற்போது, 40 ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 24 மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்களாகவும், 14 விரிவாக்க மையங்களாகவும், 02 ஊரக மையங்களாகவும் செயல்படுகின்றன.

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்திற்கான புதிய கட்டடத்தை சென்னை, மயிலாப்பூரில் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ரூ.2.41 கோடி மதிப்பில் புதிய கட்டடம் கட்டும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி வாயிலாக நடைபெறுகிறது.

**1.6.1 ஜவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர பயிற்சிகள்**

சென்னை ஜவகர் சிறுவர் மன்றத்தில் குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடற்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, டிரம்ஸ், பேண்டு, தையல், ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல், திரை அச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய கலைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேற்காணும் கலைகளில் ஏதேனும் 4 கலைகளில்,

மாவட்டங்களின் தேவைக்கேற்ப மாவட்ட மையங்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பயிற்சித் திட்டங்கள்**

### 1.6.2 மாவட்ட அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்

மாணவர்களின் கோடை விடுமுறையை உபயோகமானதாகவும் மகிழ்வானதாகவும் ஆக்க மாவட்ட அளவிலான கோடைக்கால பயிற்சி முகாம்கள் ஜவகர் சிறுவர் மன்ற மையங்களால் நடத்தப்படுகின்றன.

### 1.6.3 மாநில அளவிலான கோடைக்கால மற்றும் குளிர்கால பயிற்சி முகாம்கள்

மாநில அளவிலான கோடைக்கால உண்டுறை முகாம்கள் கோடை விடுமுறையின் போது ஏதேனும் ஒரு மலை வாசஸ்தலத்தில் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான குளிர்கால உண்டுறை பயிற்சி முகாம்கள் அரையாண்டு விடுமுறையின் போது ஏதாவது ஒரு மாவட்டத்தில்

நடத்தப்படுகின்றன. குரலிசை, நாட்டுப்புற நடனம், பரதநாட்டியம், ஓவியம், கைவினை, யோகா, சிலம்பாட்டம் போன்றவற்றில் சிறார்கள் மகிழ்ச்சியாக பயிற்சி பெறுகிறார்கள்.

### 1.6.4 மாநில அளவிலான கைவினை முகாம்

மாநில அளவிலான உண்டுறை கைவினை முகாம் ஆண்டுக்கு ஒருமுறை காலாண்டு விடுமுறையின் போது நடத்தப்படுகிறது. பொம்மை செய்தல், துணி ஓவியம், பத்திக், கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் மற்றும் களிமண் சிற்பங்கள் செய்தல் போன்ற கலைகளில் சிறார்களுக்கு மகிழ்ச்சியான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 1.6.5 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள்

மாணவர்களின் கலைத்திறனை அடையாளம் காணவும், ஊக்கப்படுத்தவும் குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் மற்றும் ஓவியம் ஆகிய

கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவினர்களுக்கு மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றியாளர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவிலான போட்டிகளில் 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவினர்களில் முதல் பரிசு பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு வயதுப் பிரிவுக்கும் நான்கு துறைகளில் மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு பெறும் வெற்றியாளர்கள் முறையே ரூ.10,000/-, ரூ.7,500/- மற்றும் ரூ.5,000/- பரிசுத் தொகையாகப் பெறுகிறார்கள். 24 வெற்றியாளர்களுக்கு மொத்த பரிசுத் தொகையாக ரூ.1,80,000/- மற்றும் பதக்கங்கள், பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

### 1.6.6 தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்ற மாணவர்கள் பங்கேற்பு

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகப் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம் தேசிய ஒருமைப்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை 3 நாட்களுக்கு நடத்துகிறது. தமிழ்நாட்டில் உள்ள 21 இணைவு பெற்ற ஜவகர் சிறுவர் மன்றங்களின் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

### 1.6.7 தேசிய பாலஸ்ரீ விருது

புது தில்லியிலுள்ள தேசிய சிறுவர் மன்றம் தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தகுதியானவர்களைத் தேர்வு செய்ய போட்டிகளை நடத்துகிறது. நான்கு பொதுப் பகுப்புகளின் கீழ் படைப்பாக்கச் செயல்திறன் (Creative Performance – Dance, Vocal Music, Percussion, Instrumental Music, Theatre Art, Puppetry), நுண்கலை படைப்பாற்றல் (Creative Art – Painting, Craft, Sculpture,

Visual Art), படைப்பாற்றல் மிக்க அறிவியல் புதுமைகள் (Creative Scientific Innovations – Scientific Model Making, Project Making, Scientific Innovation, Problem Solving) மற்றும் எழுத்துக்கலை படைப்பாற்றல் (Creative Writing – Story, Prose, Poem, Dialogue and Play) போன்ற 16 உட்பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளின் வெற்றியாளர்களிலிருந்து தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறுவோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## 1.7 **கலைச்செம்மல் விருதுகள்**

மரபுவழி மற்றும் நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க கலைஞர்களுக்குத் தமிழ்நாடு அரசு 'கலைச்செம்மல்' விருது வழங்கி ஊக்குவிக்கிறது. செப்புப் பட்டயம், விருதுத் தொகை ரூ.1,00,000/– மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 6 புகழ்பெற்ற கலைஞர்களுக்கு விருதுகள்

வழங்கப்படுகின்றன. இதுவரை, பாரம்பரிய கலைகளில் 21 புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், நவீனபாணிக் கலைகளில் 52 புகழ்பெற்ற கலைஞர்களுக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.8 மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ஓவிய சிற்பக் கலைக்காட்சி மற்றும் விருதுகள்

அரசால் அமைக்கப்பட்ட தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட திறமையான கலைஞர்களின் சிறந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைக் கொண்டு மாநில அளவிலான கலைக்காட்சிகள் நடத்தப்படுகின்றன. காட்சிப் படுத்தப்பட்ட படைப்புகளில் மிகச் சிறந்த படைப்புகளுக்கு பரிசளிக்கப்படுகிறது. மூத்தோர் பிரிவில் (30 வயதிற்கு மேல்) 30 கலைஞர்களுக்கு ரூ.15,000/- பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களும், இளையோர் பிரிவில் (30 வயதிற்கு கீழ்) 30 கலைஞர்களுக்குப் பரிசுத் தொகை

ரூ.10,000/- மற்றும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

**1.9 தனிநபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கலைஞர்களுக்கு நிதியுதவி**

ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க கலைஞர்கள் தனிநபர் கலைக்காட்சிகள் மற்றும் கூட்டுக் கலைக்காட்சிகள் நடத்த நிதியுதவி வழங்கப்பட்டு பேணப்படுகிறார்கள். தனிநபர் கலைக்காட்சி நடத்திட ரூ.25,000/- வீதம் 10 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக்காட்சி நடத்திட குழுவிற்கு ரூ.50,000/- வீதம் 5 குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 1.10 கவின்கலை பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

அரசு கவின்கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில், இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணவர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் சிறந்த 4 மாணவர்களுக்கு தலா ரூ.5,000/–வீதமும் கல்வி உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் சிறந்த 10 மாணவர்களுக்கு ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் சிறந்த 2 மாணவர்களுக்கு ரூ.5,000/– வீதமும் கல்வி உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணவர்கள் பயனடைகின்றனர்.

இதற்கென ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ.90,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.11 தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

நாட்டுப்புறக் கலை வடிவங்களை வளர்க்கவும், அவற்றை இளம் தலைமுறையினருக்கு காட்சிப்படுத்தவும், நிதி உதவிகள் வழங்குவதன் மூலம் நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யவும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. 100 நாட்டுப்புறக் கலை வடிவங்கள் தமிழக அரசால் பட்டியலிடப்பட்டுள்ளன. வாரியத்தில் இதுவரை 47,976 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். 8825 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.188.45 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நலத்திட்ட உதவிகள் கீழ்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:-

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் விவரம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூக்குக் கண்ணாடி வாங்குதல் | 3811 | 23.58 |
| 2 | கல்வி | 3652 | 51.18 |
| 3 | திருமணம் | 629 | 15.93 |
| 4 | மகப்பேறு | 19 | 1.14 |
| 5 | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 1 | 0.03 |
| 6 | இயற்கை மரணம் / ஈமச்சடங்கு செலவு | 713 | 96.59 |
| | மொத்தம் | 8825 | 188.45 |

நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி, திருமணம், பிரசவம் மற்றும் இறப்பு போன்றவற்றிற்குக் கீழ்வருமாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:–

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் விவரம் | நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | ஆண்டு கல்வி உதவித் தொகை (இரு வாரிசுகள்) | |
| | பத்தாம் வகுப்பு பயிலும் மகள் | 1,000 |
| | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | பதினோராம் வகுப்பு பயிலும் மகள் | 1,000 |
| | பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மகள் | 1,500 |
| | பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | முறையான பட்டப் படிப்பு | 1,500 |
| | முறையான பட்டப் படிப்பு விடுதியில் தங்கி பயிலுதல் | 1,750 |
| | முறையான முதுகலை பட்டப்படிப்பு | 4,000 |
| | முறையான முதுகலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கி பயிலுதல் | 5,000 |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் விவரம் | நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) |
|---|---|---|
| | தொழில்நுட்பப் பட்டப்படிப்பு (சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்) | 4,000 |
| | தொழில்நுட்பப் பட்டப் படிப்புகள் விடுதியில் தங்கி பயிலுதல் | 6,000 |
| | முறையான முதுகலை தொழிற் படிப்புகள் | 6,000 |
| | முறையான முதுகலை தொழிற் படிப்பு விடுதியில் தங்கி பயிலுதல் | 8,000 |
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) | 1,000 |
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) விடுதியில் தங்கி பயிலுதல் | 1,200 |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் விவரம் | நலத்திட்ட உதவித் தொகை (ரூ.) |
|---|---|---|
| 2 | திருமண நிதியுதவி உறுப்பினர் / மகன் / மகள் ( இரண்டு முறை மட்டும்) | 5,000 |
| 3 | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இருமுறை மட்டும்) | |
| | அ) குழந்தை பிறப்பு | 6,000 |
| | ஆ)கருச்சிதைவு /கருக்கலைப்பு | 3,000 |
| 4 | மூக்கு கண்ணாடி வாங்குவதற்கான நிதியுதவி (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டும்) | 1,500 |
| 5 | இயற்கை மரண செலவுகள் | 20,000 |
| 6 | ஈமச்சடங்கு செலவுகள் | 5,000 |
| 7 | விபத்து மரண உதவித்தொகை | 1,00,000 |

## 1.12 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

'தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்' என்ற அமைப்பானது தமிழக பாரம்பரிய கலைகளை

ஊக்குவிக்க 1955 ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டு, 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' என 1973 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த அமைப்பு இயல், இசை, நாடக வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது.

### 1.12.1 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப் பணிகள்

- கலைஞர்களின் நலனுக்காக கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- கலை நிகழ்ச்சிகளில் வாய்ப்புகள் வழங்கி இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்.
- மாநிலங்களிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம் செய்தல்.
- அயல்நாடுகளில் தமிழகக் கலைகளைப் பரப்புதல்.

- அகில இந்திய அளவில் 'பாரதி' (இயல்), 'எம்.எஸ்.சுப்புலட்சுமி' (இசை), 'பாலசரஸ்வதி' (நடனம்) விருதுகள் வழங்குதல்.
- கலைச் சேவை புரிந்த கலைஞர்களுக்கு மாநில அளவில் 'கலைமாமணி விருது' வழங்குதல்.
- அரிய கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.
- அரிய கலை நூல்களைப் பதிப்பித்திட நல்கை வழங்குதல்.

### 1.12.2 கலைமாமணி விருது

இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், இசை நாடகம், நாட்டுப்புறக் கலைகள், தொலைக்காட்சி மற்றும் இதர கலைகள் போன்ற துறைகளில் மிகச் சிறந்த பங்களிப்பாற்றிய புகழ் பெற்ற கலைஞர்களுக்கு ஐந்து சவரன் (40 கிராம்) தங்கப் பதக்கமும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இதுவரை 1924 கலைஞர்களுக்கு பெருமைமிக்க 'கலைமாமணி விருதுகள்' வழங்கப்பட்டுள்ளன.

### 1.12.3 இதர பணிகள்

- நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந் தோறும் ரூ.3,000/- நிதியுதவியாக வழங்குதல்.
- மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு ரூ.25,000/- குடும்ப பராமரிப்பு நிதியுதவியாக ஒரு முறை வழங்குதல்.
- வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1,00,000/- மதிப்பிலான பொற்கிழி வழங்குதல்.
- நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக்குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்குதல்.
- நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள், வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்த தொடர்வண்டி மற்றும் அரசுப்

பேருந்துகளில் பயணிக்க பயண கட்டணச் சலுகை வழங்கப் பரிந்துரை செய்தல்.

- புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நல்கை வழங்குதல்.

## 1.13 தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

இந்திய அரசின் கலாச்சாரத் துறையின் ஒரு தன்னாட்சி அமைப்பாக 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மற்றும் நான்கு தென்னக மாநிலங்கள், மூன்று யூனியன் பிரதேசங்கள் உதவியுடன் தென்னகப் பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு உறுப்பு மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

## 1.14 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

சுதந்திரத் தின அமுதப் பெருவிழாவில், இந்திய சுதந்திரத்தின் 75–ஆம் ஆண்டு நிறைவு

விழாவும், மக்களின் பெருமைமிகு வரலாறு, பண்பாடு மற்றும் சாதனைகளும் கொண்டாடப்பட்டு வருகின்றன. 12.03.2021–ல் தொடங்கி 75 வார நிகழ்ச்சிகளாக இந்திய சுதந்திரத்தின் 75–ஆம் ஆண்டு நிறைவு விழா 15.08.2023 அன்று நிறைவடைகிறது. சாதனைகள்@75, சுதந்திரப் போராட்டம்@75, கருத்துக்கள்@75, தீர்வுகள்@75 மற்றும் செயல்பாடுகள்@75 ஆகியன இக்கொண்டாட்டங்களின் 5 முக்கிய கருப்பொருட்களாகும். மாநிலத்தின் அனைத்து துறைகள் மற்றும் மாவட்டங்கள் பெருவாரியான மக்கள் பங்கேற்புடன் நிகழ்ச்சிகளை நடத்தும் வகையில் நிகழ்ச்சிகளின் நாட்காட்டிகளை வகுத்துள்ளன. கலை பண்பாட்டுத் துறை இக்கொண்டாட்டங்களை ஒருங்கிணைக்கும் துறையாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 59 அடி உயர சுதந்திர தின நினைவுத் தூண் சென்னையில்

திறந்து வைக்கப்பட்டது. மேலும், சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கினை விவரிக்கும் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற தலைப்பில் புகைப்பட கண்காட்சியையும் நவம்பர் 1, 2021 அன்று துவங்கி வைத்தார்கள். வ.உ.சிதம்பரனார் அவர்களின் வாழ்க்கை மற்றும் சுதந்திரப் போராட்டத்தில் பங்களிப்புகள் குறித்த நடமாடும் கண்காட்சியை மாநிலத்தில் உள்ள பல்வேறு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவங்கி வைத்தார்கள். தமிழகத்தின் சுதந்திரப் போராட்டம் குறித்த கண்காட்சி சென்னை அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

மாநிலம் முழுவதும் 15.04.2022 வரை 212 நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்று, அவற்றில் 141 நிகழ்ச்சிகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் ஒளிப்படங்கள் அரசின் வலைத்தளமான

https://amritmahotsav.nic.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**1.15 அறிவிப்புகள் 2021–2022 :–**

1. 75–வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை கொண்டாடும் வகையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.164.00 இலட்சம் நிதி, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையில் தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளைக் காட்சிப்படுத்தும் 75 ஒளிப்படங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
2. சென்னையில் பிரம்மாண்ட கலை விழா நடத்திட ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.91.00 இலட்சம் நிதி 'நம்ம ஊரு திருவிழா' என்ற கலை விழா நடத்த பயன்படுத்தப்பட்டது.
3. இளைஞர்களின் கலைத்திறன்களை வெளிப்படுத்தவும், மாநில அளவிலான கலை விழா நடத்தவும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.75.00 இலட்சம் நிதி மாவட்ட / மாநில

அளவிலான கலைப் போட்டிகள் நடத்த பயன்படுத்தப்படுகிறது.

4. 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிட ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.50.00 இலட்சம் நிதி அவர்களுக்கு இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
5. வறிய நிலையில் வாழும் கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் ஒருமுறை வழங்கப்படும் பொற்கிழித் தொகையினை ரூ.50,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி வழங்க ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.10.00 இலட்சம் கலைஞர்களின் நலனுக்காக உரிய வகையில் பயன்படுத்தப்படுகிறது.
6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.6.00 இலட்சம் நிதி முத்தமிழ் பயிற்சி முகாம்கள் நடத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது.

7. கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் சார்நிலை அலுவலகங்கள், கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஒளியச்சு இயந்திரங்கள் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.44.00 இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டது.

8. கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.160.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

**1.16 சாதனைகள் :–**

1. நம்ம ஊரு திருவிழா என்ற பெயரில் பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலைவிழா சுமார் 500 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு 30–க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளுடன் 21.03.2022 அன்று நடத்தப்பட்டது. இந்த விழா 14–க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

2. குடியரசு தின விழா கொண்டாட்டங்களின் போது தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கலை பண்பாட்டுத் துறையின் சார்பாக மிகச் சிறப்பான முறையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கலைஞர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பூதியம் வழங்கப்பட்டது.
3. 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகத் தமிழ்நாட்டின் கலை வடிவங்களை ஆவணப்படுத்தவும், பரப்பவும் 75 ஒளிப்படங்கள் தயாரிக்கப்பட்டு வலைத்தளங்களிலும், சமூக ஊடகங்களிலும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.
4. 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 112 கலை நிகழ்ச்சிகள் மற்றும் பிற நிகழ்ச்சிகள்

கலை பண்பாட்டுத் துறையால் நடத்தப்பட்டுள்ளன.

5. துபாயில் 25.03.2022 முதல் 31.03.2022 வரை நடந்த உலக கண்காட்சியில் (Expo 2020–Dubai) கலை பண்பாட்டுத் துறை சார்பாக வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
6. சென்னை, மயிலாப்பூரில் 01.03.2022 அன்று நடந்த மகா சிவராத்திரி விழாவில் 70 க்கும் மேற்பட்ட அரிய இசைக் கருவிகளின் கண்காட்சி மற்றும் வாசிப்பு நிகழ்ச்சியை கலை பண்பாட்டுத் துறை நடத்தியது.
7. பாரம்பரிய மற்றும் நாட்டுப்புறக் கலைகளை உலகெங்கும் பரப்பும் நோக்கில் 'கால் கொண்ட கவிதைகள்' என்ற பெயரில் மாநிலத்தின் பல்வேறு கலை வடிவங்களைத் தாங்கிய நாட்காட்டியினை கலை பண்பாட்டுத் துறை முதன் முறையாக வடிவமைத்து வெளியிட்டது.

8. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்த 684 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.28.03 இலட்சம் நிதியுதவியில் பல்வேறு நலத்திட்டங்கள் அளிக்கப்பட்டன.
9. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ் 1000 நலிந்த கலைஞர்களுக்கு மாதம் ரூ.3,000/– நிதியுதவி வழங்கப்பட்டது.
10. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக 18 மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒருமுறை குடும்ப பராமரிப்பு நிதியாக ரூ.25,000/– வழங்கப்பட்டது.
11. மகாகவி பாரதியாரின் 100–வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் ரூ.10.00 இலட்சம்

நிதி ஒதுக்கீட்டில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

12. நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று வந்த 88 நலிந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக ரூ.74.46 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

13. புகழ் பெற்ற கலைஞரான திரு.எம்.கே.தியாகராஜ பாகவதரின் பேரன் திரு.சாய்ராம் என்பவருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

14. மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் வழங்கப்படும் விருதுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் 5–இலிருந்து 15–ஆக உயர்த்தப்பட்டு, அதற்கென கூடுதல்

நிதியாக ரூ.53.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. சுற்றுலாத் துறை மற்றும் தென்னக பண்பாட்டு மையத்துடன், கலை பண்பாட்டுத் துறை இணைந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு கலைஞர்களுக்கு ரூ.31.30 இலட்சம் மதிப்பூதியம் வழங்கப்பட்டது.

16. கலை பண்பாட்டுத் துறையால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பிற முன்னெடுப்புகள் குறித்த தகவல்களைப் பலரும் அறியும்படி செய்ய யுடியூப், முகநூல், டிவிட்டர் மற்றும் வாட்ஸ்ஆப் குழுக்கள் போன்ற சமூக ஊடகங்கள் மற்றும் வலைத் தளங்களில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

## 1.17 2021–2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கோவிட்–19 விழிப்புணர்வு நிகழ்ச்சி | குன்றத்தூர் 01.08.2021 காஞ்சிபுரம் 06.08.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.30 |
| 2 | கோவிட்–19 விழிப்புணர்வு நிகழ்ச்சி | கரூர் 06.08.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 0.12 |
| 3 | சுதந்திரத் தின விழா கலை நிகழ்ச்சிகள் | தருமபுரி 15.08.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.30 |
| 4 | அரசுப் பொருட் காட்சி – 100 வது நாள் சாதனை விளக்கம் | திருச்சிராப்பள்ளி 29.08.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 0.21 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 5 | வ.உ.சி. 150–வது பிறந்த நாள் விழா | திருநெல்வேலி 05.09.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 0.50 |
| 6 | சித்தன்ன வாசல் சுற்றுலா கலை விழா | திருச்சிராப்பள்ளி 27.09.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 0.30 |
| 7 | நாடக விழா | கோயம்புத்தூர் 30.09.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.20 |
| 8 | நாட்டிய விழா | கோயம்புத்தூர் 05.10.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.20 |
| 9 | தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக விழா | காட்டு நாயக்கன்பட்டி – ஓட்டப் பிடாரம் 13.11.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.00 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 10 | உலக மரபு நாள் விழா | காஞ்சிபுரம் 29.11.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.26 |
| 11 | தமிழிசை விழா | திருப்பூர் 30.11.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.75 |
| 12 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | திருப்பத்தூர் 02.12.2021 வேலூர் 16.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.74 |
| 13 | நாட்டிய விழா | சேலம் 16.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 |
| 14 | தமிழிசை விழா | சேலம் 16.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.75 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 15 | நாட்டுப்புறக் கலை விழா | குடுக்கச்சிவிளை, கன்னியாகுமரி 19.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.00 |
| 16 | நாட்டிய விழா | சிவகங்கை 22.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.75 |
| 17 | 8 வது தேசிய சித்தா நாள் விழா | சென்னை, நந்தம்பாக்கம் 23.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.91 |
| 18 | நாடக விழா | திண்டுக்கல் 24.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.75 |
| 19 | இந்திய நாட்டிய விழா | மாமல்லபுரம் 27.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் (சுற்றுலாத் துறையுடன் இணைந்து) | 1.30 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 20 | திருநெல் வேலி மாவட்டக் கலைமன்றம் தொடக்க விழா | திருநெல்வேலி 28.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.72 |
| 21 | இந்திய நாட்டிய விழா | மாமல்லபுரம் 03.01.2022 மற்றும் 04.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம் காஞ்சிபுரம் | 0.80 |
| 22 | இந்திய நாட்டிய விழா | கடலூர் மாவட்டம் 10.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.30 |
| 23 | இந்திய நாட்டிய விழா | மாமல்லபுரம் 23.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 0.30 |
| 24 | இந்திய நாட்டிய விழா | விழுப்புரம் 27.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.60 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 25 | விடுதலைப் போரில் தமிழகம் | கோயம்புத்தூர் 28.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.15 |
| 26 | விடுதலைப் போரில் தமிழகம் | எட்டயபுரம் 01.02.2022<br>தூத்துக்குடி 02.02.2022<br>திருநெல்வேலி 03.02.2022<br>வள்ளியூர் 04.02.2022<br>கன்னியாகுமரி 05.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல் வேலி | 2.28 |
| 27 | நாட்டிய விழா | தஞ்சாவூர் 04.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.50 |
| 28 | விடுதலைப் போரில் தமிழகம் | கரூர் 06.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 0.50 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 29 | நாட்டிய விழா | தேனி<br>08.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.75 |
| 30 | விடுதலைப் போரில் தமிழகம் | திருச்சிராப்பள்ளி<br>08.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 0.30 |
| 31 | விடுதலைப் போரில் தமிழகம் | தஞ்சாவூர்<br>09.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.56 |
| 32 | விடுதலைப் போரில் தமிழகம் | திண்டுக்கல்<br>10.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.28 |
| 33 | விடுதலைப் போரில் தமிழகம் | திருவாரூர் மாவட்டம் வடுவூர் மற்றும் மன்னார்குடி<br>09.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.93 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 34 | விடுதலைப் போரில் தமிழகம் | தருமபுரி 10.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.15 |
| 35 | விடுதலைப் போரில் தமிழகம் | அரியலூர் 11.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 0.66 |
| 36 | விடுதலைப் போரில் தமிழகம் | கிருஷ்ணகிரி 11.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.20 |
| 37 | விடுதலைப் போரில் தமிழகம் | திருப்பூர் 11.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.30 |
| 38 | விடுதலைப் போரில் தமிழகம் | பெரம்பலூர் 12.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 0.75 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 39 | விடுதலைப் போரில் தமிழகம் | கடலூர் மாவட்டம், பரவலூர் 13.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.22 |
| 40 | விடுதலைப் போரில் தமிழகம் | திருப்பத்தூர் 13.02.2022 வேலூர் 14.02.2022 & 15.02.2022 இராணிப்பேட்டை 16.02.2022 செங்கல்பட்டு 16.02.2022 காஞ்சிபுரம் 17.02.2022 திருவண்ணா மலை 17.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 4.30 |
| 41 | விடுதலைப் போரில் தமிழகம் | விழுப்புரம் 15.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.73 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 42 | நாடக விழா | கடலூர் 16.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.50 |
| **43** | விடுதலைப் போரில் தமிழகம் | மதுரை 23.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.75 |
| 44 | திரு நெடுங்குடி சிவராத்திரி விழா | புதுக்கோட்டை 01.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 0.75 |
| 45 | நாடக விழா | சிவகாசி 04.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.50 |
| 46 | நாட்டிய விழா | திருநெல்வேலி 05.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 0.80 |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 47 | இளைஞர் களுக்கான கலைப் போட்டி | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி 12.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.70 |
| 48 | இளைஞர் களுக்கான கலைப் போட்டி | திருவாரூர் 12.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.35 |
| 49 | திருவாரூர் ஆழித்தேர் விழா | திருவாரூர் 14.03.2022 மற்றும் 15.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.90 |
| 50 | நாகை சங்கமம் விழா | நாகப்பட்டினம் 20.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.50 |

**1.18 தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள், 2021–2022**

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு |
|---|---|---|---|
| 1 | நவராத்திரி கலை விழா | கோயம்புத்தூர் 06.10.2021 முதல் 13.10.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் |
| 2 | கூத்து திருவிழா | சேலம் 13.11.2021 முதல் 17.11.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |
| 3 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | தஞ்சாவூர் 01.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |
| 4 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | செங்கோட்டை 10.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி |
| 5 | பாரதியார் பிறந்த நாள் மற்றும் 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | எட்டயபுரம் 11.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு |
|---|---|---|---|
| 6 | வைகுண்ட ஏகாதசி விழா | ஸ்ரீரங்கம் 11.12.2021 முதல் 13.12.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 7 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | திருவாரூர் 23.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |
| 8 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | கரூர் 28.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 9 | கனியான்கூத்து கலைவிழா | திருநெல்வேலி 30.12.2021 மற்றும் 31.12.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி |
| 10 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | நீலகிரி 07.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் |
| 11 | மார்கழி இசை விழா | தஞ்சாவூர் 10.01.2022 மற்றும் 11.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு |
|---|---|---|---|
| 12 | திருப்பாவை விழா | ஸ்ரீவில்லிபுத்தூர் 13.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி |
| 13 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | நாகப்பட்டினம் 24.01.2022 விழுப்புரம் 27.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |
| 14 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | திருச்சிராப்பள்ளி 27.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 15 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | கோயம்புத்தூர் 28.01.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் |
| 16 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | நாமக்கல் 05.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |

| வ. எண் | நிகழ்வு | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு |
|---|---|---|---|
| 17 | மாசி பெருந்திருவிழா | திண்டுக்கல் 16.02.2022 மற்றும் 17.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை |
| 18 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | புதுக்கோட்டை 21.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 19 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | அரியலூர் 23.02.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 20 | நாட்டுப்புறக் கலைவிழா | சிவகங்கை 04.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை |
| 21 | 75 வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா | கடலூர் 05.03.2022 உளுந்தூர்பேட்டை 07.03.2022 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |

### 1.19 முடிவுரை

தமிழ்நாட்டின் சிறந்த கலை விழுமியங்களையும், அழகிய கலை வடிவங்களையும் பாதுகாக்கவும், வளர்க்கவும் பல கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் தரமான கல்வியை இளைய தலைமுறையினருக்கு வழங்கியும் கலை பண்பாட்டுத் துறை ஊக்கத்தோடு செயலாற்றி வருகிறது. பல்வேறு திட்டங்கள் மூலம் நிதியுதவி வழங்கியும், நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பளித்தும் கலைஞர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் நலன் உறுதிப்படுத்தப்படுகிறது. அரிய மற்றும் வளரும் கலைஞர்கள் அடையாளம் காணப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர். நம் வளமான பாரம்பரியத்தின் மதிப்பு மிக்க ஆபரணங்களாய் விளங்கும் கலை வடிவங்களை முறையாக ஆவணப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.




துபாயில் 25.03.2022 அன்று நடைபெற்ற உலக வர்த்தக கண்காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரங்கை கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தொடங்கி வைத்தார்கள்.




20.01.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18 மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தாருக்கு ரூ. 25,000/-க்கான ஒரு முறை வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு நிதி காசோலைகளை வழங்கினார்.




சென்னை தீவுத்திடலில் 21.03.2022 அன்று நடைபெற்ற பிரம்மாண்டமான நாட்டுப்புற கலை விழாவான 'நம்ம ஊரு திருவிழா'.




தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 18.10.2022 அன்று நடைபெற்ற சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் 150 வது பிறந்த நாள் விழா.



சென்னை மைலாப்பூரில் 01.03.2022 அன்று நடைபெற்ற பாரம்பரியமான அரிய இசைக் கருவிகளின் கண்காட்சி மற்றும் செயல் விளக்கம்.




சென்னையில் 12.1.2022 அன்று அயலகத் தமிழர் தினத்தில் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.




மாமல்லபுரத்தில் 26.12.2021 அன்று நடைபெற்ற இந்திய நாட்டியத் திருவிழாவில்
நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகள்.

# அருங்காட்சியகங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2022–2023

## 2. முன்னுரை

கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் மரபுகள் நிறைந்த பழமையான நாகரீகத்தின் தாயகமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டின் கலாச்சார செழுமையை அருங்காட்சியகங்கள் வழியாக அறிவதே சிறந்த வழியாகும்.

வருங்கால சந்ததியினருக்காக அரும்பொருட்களை சேகரித்தல், ஆவணப்படுத்துதல், காட்சிப்படுத்துதல் மூலமாக நமது மரபுகளை பாதுகாத்து வரும் அருங்காட்சியகங்கள் வரலாற்றின் கருவூலங்களாகத் திகழ்வதுடன் கற்றலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய மையங்களாக விளங்குகின்றன. பார்வையாளர்கள் பயனடையும் வகையில் நமது கடந்த காலத்தை புரிந்துகொண்டு,

பாராட்டுவதற்கு உரிய சான்றாவணங்களை விளக்குவதுடன் அது தொடர்பான தகவல்களும் வழங்கப்படுகின்றன.

**2.1. நோக்கங்கள்**


அருங்காட்சியகங்கள் நமது மாநிலத்தின் அரும்பொருட்களை பாதுகாத்து, ஆவணப்படுத்தி மக்களிடையே தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் வரலாற்றுப் பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக கருத்தியல் சார்ந்த காட்சி அமைப்பினை வடிவமைத்து வருகின்றன. இத்துறையின் செயல்பாடுகளாவன:

1. அரும்பொருட்களை சேகரித்தல்.
2. சந்ததியினருக்காக காட்சிப் பொருட்களைப் பாதுகாத்தல் .
3. சேமிப்பு மற்றும் ஆவணப்படுத்துதல்.
4. ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றை பார்வையாளர்களுக்கு அறியத் தருதல்

5. கருத்தியல் சார்ந்த (Theme Based) காட்சியமைப்பு மற்றும் சிறப்பு கண்காட்சிகள் மூலம் பொதுமக்களின் பார்வைக்காக சேகரிப்புகளைக் காட்சிப்படுத்துதல்.
6. கல்விப் பணிகளை நடத்துதல்.

## 2.2. நிருவாக அமைப்பு

அருங்காட்சியகங்கள் துறை, சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்கள் இயக்குநர் தலைமையில் பணிபுரியும் இரண்டு உதவி இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், காப்பாட்சியர்கள், உதவி காப்பாட்சியர்கள், விளக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களைக் கொண்டு நிருவகிக்கப்படுகிறது.


அரசுஅருங்காட்சியகங்கள் துறை
இயக்குநர்
உதவிஇயக்குநர் (தொழில்நுட்பம்)
உதவிஇயக்குநர் (நிர்வாகம்)
முதன்மைக் கணக்கு அலுவலர்
காப்பாட்சியர்கள் சென்னைஅரசு அருங்காட்சியக
காப்பாட்சியர்கள் மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்
கண்காணிப்பாளர் (பொதுமற்றும் பணியமைப்பு பிரிவு)
கண்காணிப்பாளர் (பட்டிப்பிரிவு)
உதவிக் காப்பாட்சியர்கள் காட்சிக்கூட விளக்குநர்கள், ஓவியர்தரம்–1, தச்சர், போலிஉயிரினம் ஆக்குநர், தொழில்நுட்ப உதவியாளர், ஆய்வக உதவியாளர், புகைப்படக் கலைஞர் அச்சகப் பிரிவு
உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், காட்சிக் கூடக் காவலர்கள், காவலர்கள், தோட்டக்காரர்
உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தலைமை சேவகர், நுழைவுச்சீட்டு பரிசோதகர், காட்சிக்கூடக் காவலர், காவலர்கள், தோட்டக்காரர்கள், துப்புரவாளர்கள்
மேல்நிலைக் கணக்கர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர், நுழைவுச்சீட்டு விற்பனை பணியாளர், புத்தக விற்பனை– பணியாளர்

## 2.3. அரசு அருங்காட்சியகம், சென்னை

சென்னை அரசு அருங்காட்சியகம் கி.பி. 1851–ல் தொடங்கப்பட்ட இந்தியாவிலேயே இரண்டாவது பழமையான அருங்காட்சியகம் ஆகும். இது ஒரு பல்நோக்கு அருங்காட்சியகம் ஆகும். இதில் வளமான அரும்பொருட்கள், கலைப் பொருட்கள் மற்றும் இயற்கை வரலாற்று சேகரிப்புகள் 7 கட்டடங்களில் (மூன்று பாரம்பரியக் கட்டடங்கள் உட்பட) 57 காட்சிக் கூடங்களாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தொல்லியல், கலை, மானுடவியல், புவியியல், தாவரவியல் விலங்கியல், நாணயவியல், சிறுவர் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் உள்ளன. மேலும், வேதியியல் பாதுகாப்பு, கல்வி, வடிவமைப்பு மற்றும் காட்சி ஆகிய பிரிவுகள் உள்ளன. அருங்காட்சியகத்தின் பழங்காலப் பொருட்களைப் பாதுகாக்க, 1930–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வேதியியல் பாதுகாப்பு மற்றும்

ஆராய்ச்சி ஆய்வகம் இவ்வகையிலான இந்தியாவின் முதலாவது ஆய்வுக் கூடமாகும்.

சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகத்தில் உலகப் புகழ்பெற்ற தென்னிந்திய படிமங்கள், அமராவதி சுண்ணாம்புக்கல் சேகரிப்புகள், தஞ்சை ஆயுதங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், உரோமானிய நாணயங்கள், முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் குலோத்துங்க சோழரின் பழங்கால நாணயங்கள், ராபர்ட் புரூஸ் ஃபுட்டின் வரலாற்றுக்கு முந்தைய கற்கருவிகள் தொடர்பான சேகரிப்புகள், ஆதிச்சநல்லூரில் இருந்து பெருங்கற்கால கலைப் பொருட்கள், அரிக்கமேட்டில் இருந்து உரோமானிய கலைப் பொருட்கள், அரியலூரில் இருந்து ராட்சத அம்மோனைட் புதைபடிவம் மற்றும் மங்களூரில் கிடைக்கப் பெற்ற திமிங்கலத்தின் மிகப் பெரிய எலும்புக்கூடு, இராஜா இரவிவர்மா ஓவியங்கள், தஞ்சை ஓவியங்கள் போன்ற பல குறிப்பிடத்தக்க சேகரிப்புகள் உள்ளன.

சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் பேசும்மரம், ஊடாடும் காட்சியமைப்புகள் மற்றும் சுவாரசியமான தானியங்கி டைனோசர் போன்றவை சிறுவர் அருங்காட்சியகம் மற்றும் புவியியல் காட்சிக் கூடங்களில் உள்ளன. மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் விலங்கியல் மற்றும் தாவரவியல் காட்சிக் கூடங்கள் தகவல் பேழைகளாக செயல்படுகின்றன.

இப்போது சென்னை அரசு அருங்காட்சியகம் மேம்பட்ட மின்னணு காட்சியமைப்பு தொழில்நுட்பத்தின் அதி நவீன சூழலைக் கொண்டு பார்வையாளர்களுக்கு நேரடி அனுபவத்தை வழங்குகிறது. புனை மெய்யாக்கம் (Augmented Reality), மெய்நிகர் காட்சி (Virtual Reality), உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்ப அமைப்புகள் (Touch based Technology Solutions), ஊடாடு காட்சியமைப்பு பலகைகள் (Interactive Display Panels) மற்றும் ஊடாடும்

தொடு திரைகள் (Touch Screen Kiosks) பார்வையாளர்களுக்கு காட்சி விருந்தளிக்கின்றன.

## 2.4. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்

அருங்காட்சியகங்கள் துறையின் கீழ் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி (திண்டுக்கல்), நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர், தேனி, திருவண்ணாமலை மற்றும் அரியலூரில் உள்ள புதைபடிவ அருங்காட்சியகம் ஆகிய 23 மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கடலூர், நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள், பாரம்பரிய (Heritage) கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

**2.5. பல்வேறு பணிகளின் விவரங்கள்**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ரூ.6 கோடி செலவில் மதுரையில் உள்ள காந்தி நினைவு அருங்காட்சியகத்தின் புராதன கட்டடம் புதுப்பித்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் பொதுப்பணித் துறை பாரம்பரிய கட்டடப் பிரிவின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- கண்காணிப்பு கேமராக்கள், சொத்து பாதுகாப்பு அமைப்பு, தீ எச்சரிக்கை அமைப்பு மற்றும் பொது மக்கள் அறிவிப்பு ஒலிப்பான் போன்ற நவீன கருவிகளை உள்ளடக்கிய பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்பு (Security Management Control System) 24 மணி நேர கண்காணிப்பு வசதிகளுடன் ரூ.2.50 கோடி

மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

- சென்னை அரசு அருங்காட்சியக பாந்தியன் பாரம்பரிய கட்டடத்தை (கி.பி. 1780) முழுமையாக மீட்டுருவாக்கி காட்சிக் கூடங்களை மேம்படுத்துதவதற்காக ரூ.5.41 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பாரம்பரிய கட்டடம் ஒன்றை மீட்டுருவாக்கி ரூ.2.81 கோடி செலவில் பாரம்பரிய சூழல் மற்றும் உட்கட்டமைப்பு கொண்ட ஒரு உணவகம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- புதிய நிருவாக கட்டடம் கட்டுவதற்கும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கும் ரூ.4.80 கோடி செலவில் பொதுப்பணித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் நீலகிரி மாவட்ட அரசு அருங்காட்சியகங்களின் பாரம்பரிய கட்டடங்களை முழுமையாக மீட்டுருவாக்கம் செய்யவும் மற்றும் காட்சியமைப்புகளை மேம்படுத்தவும் ரூ.5.58 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் நிறைவுற்றுள்ளன.
- அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியக வளாகத்தில் உள்ள புதையுயிரி படிவ படுகையின் இருபுறமும் சுற்றுச் சுவர் அமைத்து பாதுகாக்க ரூ.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டு, பணிகள் பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## 2.6. புதிய திட்டப் பணிகள்

ஒன்றிய அரசின் பண்பாட்டுத் துறையின் மானியத்தின் கீழ், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் செயல்படுத்த பின்வரும் புதிய திட்டப் பணிகளுக்கான முன்மொழிவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்டவற்றிற்கு நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது:–

- ❖ தாகூர் பண்பாட்டு வளாக மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.24.56 கோடி திட்ட மதிப்பீட்டில் சென்னை அரசு அருங்காட்சியக கலையரங்க தொகுப்பின் ஒருங்கிணைந்த மேம்பாடு.
- ❖ இருப்பு சேகரிப்புகளைக் காட்சிப்படுத்த புதிய தொல்லியல் தொகுப்பு கட்டடம் ரூ.23.278 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்துதல்.
- ❖ புதிய அறிவியல் மையத்தை Scheme for promotion of Culture of Science (SPOCS) திட்டத்தின் கீழ், ரூ. 22.40 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவுதல்.
- ❖ எண்ணியல் முறையில் ஆவணம் செய்து அவற்றை மெய்நிகர் காட்சிக் கூடங்களாக வடிவமைத்தலை (Digitization and Virtual

Museum) ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்துதல்.

- ❖ அருங்காட்சியக துறைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்த ரூ. 2 கோடி செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

## 2.7. வெளியீடுகள்

சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகம் வெளியிட்டுள்ள பல வெளியீடுகள் உலகெங்கும் வெளியிடப்பட்ட சிறந்த நூல்களுடன் ஒப்பிடத்தக்கவை. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தொல்லியல், மானுடவியல், கலை, தாவரவியல், புவியியல், அருங்காட்சியகவியல், நாணயவியல், விலங்கியல், தொல் பொருட்களின் வேதியப் பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளின் படைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அருங்காட்சியகத்தின் சேகரிப்புகளில் இருந்து பழங்காலப் பொருட்கள் மற்றும் மாதிரிகள் பற்றிய

நீண்ட ஆராய்ச்சியின் விளைவாக அவை உலகம் முழுவதும் குறிப்பு நூல்களாக விளங்குகின்றன.

அருங்காட்சியக கலைப் பொருட்களின் வேதியியல் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நுட்பங்கள் பற்றிய பல படைப்புகள் அரும்பொருட்களைப் பாதுகாக்கும் துறைகளுக்கு மிகவும் பயன் தரத்தக்கவை. இதுவரை, 183 அருங்காட்சியக வெளியீடுகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு, அருங்காட்சியகத் துறையின் அலுவலக வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

## 2.8. அருங்காட்சியகத் துறையின் சமீபத்திய சேகரிப்புகள்

2021–2022–ஆம் ஆண்டில், அருங்காட்சியகத் துறையானது பல்வேறு படிமங்கள் மற்றும் கற்சிற்பங்களை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சேகரித்துள்ளது.

## 2.9. அரசு அருங்காட்சியகம், சென்னை

நாமக்கல் மாவட்டத்தில் இருந்து தேவி படிமம், திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து பைரவர் படிமம், விருதுநகர் மாவட்டத்தில் இருந்து காளி படிமம், அரியலூர் மாவட்டத்தில் இருந்து வீரன், தேவி மற்றும் விஷ்ணுவின் படிமங்கள் ஆகியவை சென்னை அரசு அருங்காட்சியக தொல்பொருள் பிரிவில் புதைப் பொருட்களாக பெறப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருந்து 505 தங்க நாணயங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து 10 வெள்ளி நாணயங்களும் புதைப்பொருட்களாக பெறப்பட்டு, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள நாணயவியல் பிரிவின் சேகரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 2.10. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்

காஞ்சிபுரத்தில் பிரம்மா, விஷ்ணு, துர்க்கை, ஜேஷ்டா ஆகிய கற்சிற்பங்கள் புதைப் பொருட்களாகப் பெறப்பட்டன. கரூரில் விநாயகர், சுப்பிரமணியர்,

அய்யனார், கொற்றவை, தேவி, சப்தகன்னிமார் மற்றும் வஞ்சிவேல் ரவிக்குவான் படைத்தளபதியின் கல்வெட்டுகள் புதைப் பொருட்களாகப் பெறப்பட்டன. கன்னியாகுமரியில் லிங்கம், கிருஷ்ணகிரியில் வீரபத்திரர் கற்சிற்பம், சேலத்தில் அம்மன் சிலை ஆகியவை மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் புதைப் பொருட்களாகப் பெறப்பட்டுள்ளன.

நான்கு கோபுர கலசங்கள், மயிலுடன் கூடிய முருகனின் கற்சிற்பம், பீடத்தில் அமர்ந்த நிலையில் பூரணை புஷ்கலையுடன் அய்யனார், கருப்பசாமி, அனுமான், துர்க்கை, சதிக்கல், விஷ்ணு (நின்றநிலை), ஸ்ரீதேவி, பூதேவி, லட்சுமி நாராயணர், விநாயகர், நடனமாடும் பெண், வீரக்கல் ஆகியன விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியக சேகரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.11. கல்விப் பணிகள்

மாணவர்கள், ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொடர்ந்து பல்வேறு கல்விப் பணிகளை அருங்காட்சியகங்கள் துறை மேற்கொண்டு வருகிறது. சொற்பொழிவுகள், உள்விளக்கப் பயிற்சிகள், பணிப்பட்டறைகள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகிறது. அருங்காட்சியகம் மற்றும் அதன் சேகரிப்புகளைப் பாராட்டவும் புரிந்து கொள்ளவும் மாணவர்களை ஆக்கப் பூர்வமாகவும் திறமையாகவும் ஈடுபடுத்த ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்கள், முதுகலை பட்டதாரிகள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளுக்கு சேகரிப்புகளை ஆராய்ச்சி செய்ய, அருங்காட்சியக நடைமுறைகளைப் பற்றி அறிய மற்றும்

தொழில்முறை திறன்களைப் பெற அருங்காட்சியகங்கள் உள்விளக்கப் பயிற்சிகளை வழங்குகின்றன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பின்வரும் கல்வி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன:–

- இந்திய சுதந்திர தின 75–வது ஆண்டு விழாவை முன்னிட்டு சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் ஓவியப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், மரபு நடை, சிறப்பு கண்காட்சிகள், சிறப்பு சொற்பொழிவுகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.
- 31.08.2021 அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.
- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் கீழ்க்காணும் தலைப்புகளில் சிறப்பு சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன:–

- ❖ நெதர்லாந்தில் உள்ள ஆனைமங்கலம் செப்பேடுகள் மற்றும் சோழப் பேரரசு மற்றும் ஸ்ரீ விஜயப்பேரரசு இடையேயான தொடர்புகள்
- ❖ ஆதிச்சநல்லூர் அகழாய்வுகள்
- ❖ கீழடி வைகை நதி நாகரிகம்
- ❖ வன விலங்குகள் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சியில் அருங்காட்சியகத்தின் பங்கு

➢ 22.12.2021 அன்று "தமிழக விடுதலைப் போராட்ட வீரர்கள்" மற்றும் "ஆதிச்சநல்லூர் அரும்பொருட்கள் மற்றும் கீழடி மாதிரிகள்" குறித்த சிறப்புக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

➢ தொல்லியல், மானுடவியல், கலை, நாணயவியல் மற்றும் அறிவியல் பிரிவுகளான தாவரவியல், விலங்கியல், புவியியல் ஆகிய பிரிவுகளில் 15 கல்லூரிகளைச் சேர்ந்த 678

மாணவர்களுக்கு உள் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டன.

- சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்பு காட்சிப் பொருளை கண்காட்சியில் சிறப்பித்துக் காட்டும் வகையில், 8 பிரிவுகளிலும், "இம்மாதக் காட்சிப் பொருள்" என்ற தலைப்பில் அறிமுகப்படுத்தும் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிறபகுதிகளில் இருந்து பல்வேறு காலகட்டங்களை உள்ளடக்கிய வரலாறு, அறிவியல் மற்றும் கலை ஆர்வமுள்ள குறிப்பிடத்தக்க, அரிய மற்றும் சிறந்த பொருட்களை காட்சிப்படுத்துவதே இதன் நோக்கம். இதன் மூலம் பார்வையாளர்களுக்கு அருங்காட்சியகப் பொருட்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- 21.11.2021 அன்று சென்னை அருங்காட்சியகக் காப்பாட்சியர்களால் மரபுநடை (Heritage Walk) நடத்தப்பட்டது.
- தமிழகத்தின் பல்வேறு பள்ளி மாணவ மாணவியரின் புகைப்படத் திறனை வெளிக் கொணர 26.2.2022 அன்று சென்னை அரசு அருங்காட்சியகத்தில் சென்னை ஃபோட்டோ பினாளே (Chennai Photo–Biennale) அமைப்பின் மூலம் புகைப்படக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.
- 16.2.2022 முதல் 6.3.2022 வரை நடைபெற்ற சென்னை புத்தகக் கண்காட்சியில் சிறப்புக் கண்காட்சியாக சென்னை அரசு அருங்காட்சியகத்தின் ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களின் நலனுக்காக, மாவட்ட அருங்காட்சியகங்களில்

பல்வேறு கல்விப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட அருங்காட்சியகங்களில், உலக பாரம்பரிய தினம், பன்னாட்டு அருங்காட்சியக தினம், உலக சுற்றுலா தினம், யோகா தினம், சுதந்திர தினம், குடியரசுதினம், உலக சுற்றுச் சூழல் தினம், தேசிய அறிவியல் தினம், குழந்தைகள் தினம், தபால்தலை தினம் போன்ற சிறப்பு தினங்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடை, பணிப்பட்டறைகள் மற்றும் பயிற்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் பொதுமக்கள் மற்றும் மாணவர்களைக் கவரும் வண்ணம் நடத்தப்பட்டு வருகின்றன. கல்வெட்டு பயிற்சி மற்றும் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு பயிற்சி ஆகியவையும் நடத்தப்பட்டன.

### 2.12. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு (SDGs)

அருங்காட்சியகங்கள் பண்பாட்டினையும் இயல்பான பாரம்பரியத்தையும் தனது சேகரிப்புகள் மற்றும் அது தொடர்பான அறிவுசார் விவரங்களின்

மூலம் பெரும்பான்மையான மக்களிடையே முறைசாரா கல்வியை பரப்பி வருகிறது. சொற்பொழிவுகள், உள்விளக்கப் பயிற்சிகள், பணிப்பட்டறைகள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற பல்வேறு கல்விப் பணிகள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் திட்டமிடப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக சமூக மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை குறிப்பிடத்தக்க வகையில் சமன் செய்து இணைக்கும் பாலமாக அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன.

## 2.13. முடிவுரை

பார்வையாளர்களுக்கு நமது வளமான பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வையும், உணர் திறனையும் கல்வி மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றின் வாயிலாக ஏற்படுத்துவதே அருங்காட்சியகங்கள் துறையின் நோக்கமாகும்.

அருங்காட்சியகம், சமுதாயத்தில் அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் விதமாக செயல்பட்டு வருகிறது. எந்த ஒரு பயணமும் அந்த இடத்தில் இருக்கின்ற அருங்காட்சியகத்தை பார்வையிடாமல் முழுமை பெறுவதில்லை. அருங்காட்சியகங்களின் தலையாய நோக்கம் கலைநயமிக்க பண்பாடு தொடர்புடைய அல்லது அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்த அரும்பொருட்களை சேகரித்தல், பாதுகாத்தல், விளக்கம் அளித்தல், மேலும் அவற்றை அழகோடு காட்சிப்படுத்துதல் ஆகிய பணிகளை செய்து ஆய்வு மேற்கொள்ளும் இடமாகவும், காட்சி வழியே கற்றலை ஊக்குவிக்கும் இடமாகவும் செயல்படுவதேயாகும். தமிழ்நாட்டின் கலாச்சார பண்பாட்டு பாரம்பரியத்தினை சிறப்பாக அறியத்தரும் வகையில், அருங்காட்சியகங்கள் துறை மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றி நிறைவுடன் செயல்பட்டு வருகிறது.





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தை ரூ. 6 கோடியில் மேம்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்கள்.




மாண்புமிகு அமைச்சர் தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை மற்றும் முதன்மைச் செயலாளர் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை ஆகியோர் ஓவிய மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படக் கண்காட்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.



திருமதி. கனிமொழி கருணாநிதி, மக்களவை உறுப்பினர் அவர்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்தில், சென்னை ஃபோட்டோ பினாளே புகைப்பட கண்காட்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார்.



தூத்துக்குடி மாவட்டம் கழுகு மலையில் திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகத்தால் நடத்தப்பட்ட
பள்ளி மாணவர்களின் "மரபு நடைப் பயணம்"



சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள
அமராவதி முகப்பு சிற்பப் பலகை.



சென்னை அரசு அருங்காட்சியகத்தில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு நடராஜர் வெண்கல சிலை காட்சிப்படுத்தப்பட்டது.

115

## தொல்லியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022 – 2023

### 3. முன்னுரை

மனிதனின் கடந்த காலத்தைப் பற்றி ஆய்வு செய்வது தொல்லியலின் கருப்பொருள் ஆகும். இது உலகத்தைப் பற்றி மிகவும் பொருளுள்ள வகையிலும் வளமான முறையிலும் நமது உள்ளார்ந்த புரிதலை தீவிரப்படுத்துகிறது. மனிதனின் கடந்த காலம் குறித்தான ஆய்வு என்பது, குறிப்பிட்ட சமூக–அரசியல்–பண்பாட்டுச் சூழல்களுக்குள் மனித நடவடிக்கைகள் மற்றும் அறிவாற்றல் கோட்பாடுகளைப் படிப்பதாகும். அது காலம் மற்றும் இடப்பெயர்வுகள் மூலம் மனிதகுலத்தை மாற்றியது. *Archaeology* என்ற கிரேக்கச் சொல்லில், *Archaeos* என்பதற்கு "பண்டைய" எனவும், *logos* என்பதற்கு "கற்றல்", கலந்துரையாடல், காரணம் அல்லது அறிவியல் எனவும் பொருள் கூறலாம்.

**3.1. துறையின் நோக்கங்கள்**

மாநில தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக 1961–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது:–

- பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.
- மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல்.
- கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.
- அகழ்வைப்பகங்களை அமைத்தல்.

**3.2. நிர்வாக அமைப்பு**

தொல்லியல் துறையானது, தொல்லியல் துறை ஆணையரின் தலைமையின் கீழ், துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி கண்காணிப்பு

கல்வெட்டாய்வாளர், மண்டல உதவி இயக்குநர்கள், மற்றும் தொல்லியல் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தொல்லியல் துறையில் தனித்துவமான அகழாய்வுப் பிரிவினை வலுப்படுத்தும் விதமாக ஓர் இணை இயக்குநர், மூன்று மண்டல உதவி இயக்குநர்கள், ஐந்து தொல்லியல் அலுவலர்கள், ஒரு செயற்பொறியாளர், இரண்டு உதவி செயற்பொறியாளர்கள், நான்கு இளநிலை பொறியாளர்கள், ஓர் இளநிலை மின்–பொறியாளர், நான்கு ஸ்தபதிகள், ஒரு துணை இயக்குநர் (நிர்வாகம்), இரண்டு உதவி இயக்குநர்கள் (நிர்வாகம்) என முக்கியத்துவம் வாய்ந்த 24 பணியிடங்கள் அரசால் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### 3.3. காலக்கணிப்பில் ஒரு திருப்புமுனை

சிவகங்கை மாவட்டம், கீழடியில் 2017–2018, 2018–2019, 2019–2020, 2020–2021 மற்றும்

2021–2022 ஆகிய ஆண்டுகளில் தொல்லியல் துறை அகழாய்வுகளை மேற்கொண்டது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியிருப்பதற்குச் சான்றாக கீழடி அகழாய்வில் சேகரிக்கப்பட்ட கரிம மாதிரிகள் காலப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தபட்டு அதன் காலம் கி.மு. 6–ஆம் நூற்றாண்டு (கி.மு. 580) என கால வரையறை செய்யப்பட்டதன் மூலம் தமிழி (தமிழ்–பிராமி) எழுத்தின் காலம் கி.மு.6–ஆம் நூற்றாண்டு என அறிவியல் அடிப்படையில் முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது. இதுவரை தமிழி வரிவடிவத்தின் காலம் கி.மு.5–ஆம் நூற்றாண்டு என்று கருதப்பட்டு வந்த நிலையில், அதற்கு மாறாக மேலும் ஒரு நூற்றாண்டு காலம் முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் முழுமையான கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றாக இக்காலக்கணிப்பு திகழ்கிறது.

கங்கைச் சமவெளி மற்றும் அதே சமகாலகட்ட நாகரிகங்களில் ஏற்பட்ட இரண்டாம் நகரமயமாக்கல் தமிழ்நாட்டிலும் ஏற்பட்டுள்ளது என்பதை கீழடி அகழாய்வு முடிவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவியுள்ளது. மேலும், கங்கைச் சமவெளி பகுதியில் கண்டறியப்பட்ட இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்று அறிஞர்களிடையே பொதுவாக நிலவி வந்த கருத்தியலை முற்றிலுமாக நீக்கியுள்ளது.

கடந்த ஆண்டு (2021) கீழடியில், சூரியன், சந்திரன், காளை மற்றும் சில வடிவியல் குறியீடுகளைக் கொண்ட வெள்ளி முத்திரைக் காசு ஒன்று கண்டறியப்பட்டது. இந்த வெள்ளிக் காசானது மௌரியர் காலத்திற்கு முந்தையது அதாவது அசோகர் காலத்திற்கு முந்தையது என்று வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கிடைக்கப் பெற்றுள்ள அதிக அளவிலான தொல் பொருட்கள் பண்டைய தமிழர் நாகரிகத்தின்

பண்பாட்டுச் செழுமையை தெளிவாக எடுத்துரைக்கின்றன. மேலும், அருகிலுள்ள தலைநகரான மதுரையின் முக்கியத்துவத்திற்கு வலுவூட்டுகின்றது. இந்தப் பண்பாட்டு வாழ்விட மேடானது எவ்வித இடையூறுமின்றி பரந்த நிலப்பரப்பில் தென்னந்தோப்பின் வாயிலாக பாதுகாக்கப்பட்டுள்ளது. கீழடி தளத்தில் மறைந்துள்ள பண்பாட்டுச் செல்வங்களை தொடர்ந்து ஆய்வு செய்து பண்டைச் சமூகத்தின் பண்பாட்டு வளமையை எதிர்காலத்தில் வெளிக்கொணருவது அவசியமாகும்.

ஆதிச்சநல்லூருக்கு அருகிலுள்ள சிவகளை ஈமச்சின்னத்தில் சேகரிக்கப்பட்ட நெல்மணிகளின் மாதிரிகள் அமெரிக்காவில் புளோரிடா மாகாணம், மியாமி நகரிலுள்ள புகழ் பெற்ற பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஆய்வு முடிவானது தொல்லியலாளர்கள் இடையே ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சியது. சிவகளை அகழாய்வில் ஈமத்தாழியினுள் இருந்த ஈமச்சடங்குப்

பானை ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட உமியுடன் கூடிய அரிசியின் காலம் கி.மு.1155 என்று காலவரையறை செய்யப்பட்டுள்ளது. பொருநை ஆற்றங்கரை நாகரிகம் ஏறத்தாழ 3200 ஆண்டுகள் பழமையானது என்று அறிவியல் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்டமை மிகவும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் உலகிற்கு அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 110–விதியின் கீழ் இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவியல் பூர்வமான அறிக்கையை 09.09.2021 அன்று வெளியிட்டார்கள்.

### 3.4. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

நாடு முழுவதும் கட்டி எழுப்பப்பட்ட மரபுச்சின்னங்களின் தொகுப்பினை விட்டுச் சென்றுள்ள அற்புதமான செழுமையும், பரந்தகன்ற மற்றும் பன்முகத்தன்மையும் கொண்ட பண்பாட்டு மரபுச்சின்னங்களை இந்தியா பெற்றுள்ளது. பல்வேறு

வகையான வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களின் செழுமையான தோற்றங்களை காணமுடிகிறது. தமிழ்நாடு வளமான மரபினையும் நவீன காலத்தில் அதன் வரலாற்றையும் உறுதியுடன் வெளிப்படுத்துகிறது. புகழ்மிக்க மற்றும் அழகிய கலை மற்றும் கட்டடக் கலை மரபுச் சின்னங்களை காண்பதற்காக தமிழ்நாட்டிற்கு திரும்ப திரும்ப பயணம் மேற்கொள்கின்றனர். காலம் கடந்து நிற்கும் வரலாற்றுச் சின்னங்களில் காணப்படும் கலைகள், சிற்பிகளின் நேர்த்தியையும் திறமைகளையும் கண்கூடாக வெளிகாட்டுகின்றன. பண்டைய கட்டடக் கலையின் அழகிய சிறப்பியல்புகளை கோயில்களின் விமானங்களும் கோபுரங்களும் பெற்றுள்ளன. மேலும், இம்மாநிலத்தில் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், கோட்டைகள், குளங்கள், கட்டடக் கோயில்கள், சத்திரங்கள் மற்றும் மண்டபங்கள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

இவை இயல்பாக சமய சார்பற்ற மற்றும் சமயம் சார்ந்தவையாக உள்ளன. பல்வேறு இயற்கை சீற்றங்களாலும் இயற்கைக்கு மாறான நிகழ்வுகளாலும் கோயில்கள் மற்றும் இதர கட்டடங்கள் சேதமடைகின்றன. எனவே, அவற்றிற்கு முறையான பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு அவசியமாகிறது.

பண்டைய மரபுச் சின்னங்களிலும் தொல்லியல் சார் இடங்களிலும் பாதுகாப்பு முறைகள் மற்றும் தொல்லியல் நெறிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் தனித்தன்மை வாய்ந்தவையாகும். இந்த மாநிலத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்கவும் புனரமைக்கவும் தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு தொன்மைச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம்–1966 மற்றும் விதிகள்–1971"–ஐ இயற்றியுள்ளது.

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின்படி, "பண்டைய வரலாற்றுச் சின்னம்" என்பது, நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வரலாறு, தொல்லியல் அல்லது கலை முக்கியத்துவங்களை உள்ளடக்கிய, எந்தவொரு கட்டுமானம் அல்லது சின்னம், மண்மேடு அல்லது ஈமக்காடு, குகை மற்றும் பாறைச் சிற்பம், கல்வெட்டு அல்லது ஒற்றைக்கல் நினைவுச் சின்னம் ஆகியவற்றை குறிப்பதாகும்.

தமிழ்நாடு அரசு இது வரையில், மொத்தம் 100 பண்டைய மற்றும் வரலாற்றுச் சின்னங்களை "பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக" அறிவித்துள்ளது. இந்திய தொல்லியல் துறை (Archaeological Survey of India) இதுவரை 251 சின்னங்கள் மற்றும் 160 தொல்லியல் இடங்கள் என ஆக மொத்தம் 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களை தமிழ்நாட்டில் பாதுகாத்து வருகின்றது.

மேற்கண்ட 100 வரலாற்றுச் சின்னங்களில், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் மராத்தியர் அரண்மனை, மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை மற்றும் கவர்னர் மாளிகை, தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராஜபட்டினத்திலுள்ள மனோரா நினைவுத் தூண் ஆகியவை முக்கிய சுற்றுலாத் தளமாகவும் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாகவும் திகழ்கின்றன.

அண்மையில், பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், பங்குநத்தம் கிராமம், தருமபுரி மாவட்டம்; சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள், அனந்தமங்கலம் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்; தமிழிக் கல்வெட்டு, நெகனூர்பட்டி கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்; தமிழிக் கல்வெட்டு, சமணத் தீர்த்தங்கரர் மற்றும் சமணர் படுக்கைகள், தொண்டூர் கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்; தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுக்கைகள், முதலைக்குளம் கிராமம், உசிலம்பட்டி வட்டம், மதுரை

மாவட்டம்; தமிழிக் கல்வெட்டுகள் மற்றும் சமணத் தீர்த்தங்கரர் சிற்பம், அரிட்டாப்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் ஆகியவை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பட்டியலில் புதிதாக இடம் பெற்றுள்ளன.

இது போலவே, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பூலாங்குறிச்சி கிராமத்தில் உள்ள தமிழ்க் கல்வெட்டினையும் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாக அறிவித்திட ஏதுவாக முன்னிலை அறிவிக்கை 2021–2022–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையின் போது கீழடி, சிவகளை, கொடுமணல் ஆகிய அகழாய்வு இடங்கள் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, கீழடி அகழாய்வுத் தளத்தைச் சுற்றியுள்ள அகரம், கொந்தகை, சிவகளை மற்றும் கொடுமணல் ஆகியவற்றை "பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக" அறிவிக்க ஏதுவாக

முன்னிலை அறிவிக்கைகள் 2021–2022–ஆம் ஆண்டில் அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

இவை தவிர, 70 வரலாற்றுச் சின்னங்கள் "பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தளங்களாக" அறிவிக்கப்படுவதற்காக தொல்லியல் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## 3.5. வரலாற்றுச் சின்னங்களின் தொடர் பராமரிப்பு பணிகளுக்கு நிதி

தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் தொடர் பராமரிப்பு பணிகளுக்கு வழங்கப்பட்ட நிதியினை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்த்தி வழங்கியுள்ளது.

## 3.6. பழங்காலக் கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 2021–ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டின் சுற்றுலாத் திறனை முழுமையாக வெளிக்கொணரும் வகையில், ஒரு பெருந்திட்டம் நடப்பாண்டில் வெளியிடப்படும் எனவும், பழங்காலக்

கோட்டைகளும் அரண்மனைகளும் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, பராம்பரியச் சுற்றுலா ஊக்குவிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். அதன்படி, கீழ்காணும் மூன்று வரலாற்றுச் சின்னங்களில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் பொதுப்பணித் துறை வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ளன:–

| வ. எண். | வரலாற்றுச் சின்னம் | திட்ட மதிப்பீடு ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1 | சார்ஜா மாடி, தஞ்சாவூர் | 9.4285 |
| 2 | டேனிஷ் கோட்டை, தரங்கம்பாடி | 3.7728 |
| 3 | திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை | 3.7276 |
| | **மொத்தம்** | **16.9289** |

## 3.7. திறன் மேம்பாடு

பொதுமக்கள் தொல்லியல் என்பது வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாகும். இது நமது மரபு குறித்தான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதையும், அவர்களை தொல்லியல்

துறையில் ஈடுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மனிதனின் கடந்த காலத்தைப் பற்றிய தகவல்களையும், அறிவையும், நுண்ணாற்றலையும் வழங்குவதே இதன் நோக்கமாகும். இம்முயற்சியின் கீழ், மதுரை மண்டலத்தைச் சார்ந்த மரபுசார் ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த, "தொல்லியல் ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி மதுரையில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிலரங்கம் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2022 மே மாதத்தில் ஐந்து நாட்கள் நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. தொல்லியல் துறையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைசிறந்த அறிஞர்கள் பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளனர்.

## 3.8. பண்டைய தமிழ்ப் பண்பாடும் மரபும் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொல்லியல் துறையும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து, பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் நினைவாக "பண்டைய தமிழ்ப் பண்பாடும் மரபும்" என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தியது. இக்கருத்தரங்கமானது சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 2022 மார்ச் 11 மற்றும் 12 ஆகிய இருநாட்களில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 22 ஆய்வாளர்கள், புகழ்வாய்ந்த தொல்லியலாளர்கள் மற்றும் வரலாற்றாய்வாளர்கள் நேரடியாகவும் இணைய வழியாகவும் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இந்த நிகழ்வுகள் யூடியூப் தகவல் தொடர்பு வழியாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டன.

### 3.9. தொல்லியல் அகழாய்வுகள்

ஒரு நாட்டின் பண்டைய மதிப்புயர் பண்பாட்டினை அறிவியல் அடிப்படையில் மீண்டும் எழுதுவதற்குப் பயன்படும் ஒரு கருவியாக தொல்லியல் அகழாய்வுகள் கருதப்படுகின்றன. பண்டைய இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுப் பதிவுகள் பொதுவாக மேட்டுக் குடியினரின் நிர்வாக மற்றும் சமூக வாழ்க்கையைக் காட்டுகின்றன. அதேநேரத்தில் அகழ்வாராய்ச்சி விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை வழங்குகிறது. மேலும், உயிரியல் மாதிரிகளானது பண்டைய கால சுற்றுச் சூழலியல், வாழ்வாதார முறைகள் மற்றும் காலவாரியான வாழ்க்கை முறை மாற்றங்கள் பற்றிய முக்கியத் தகவல்களை வழங்குகின்றன.

பல்கலைக் கழகங்கள், தொல்லியல் ஆய்வு நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள் மற்றும் முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான

செயற்குறிப்புகளை மாநில அரசின் பரிந்துரையுடன், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (Central Advisiory Board of Archaeology) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக்கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்படுகிறது.

இணைப்பில் உள்ளபடி, தொல்லியல் துறை இதுவரை 43 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 37 இடங்களின் அகழாய்வு அறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர, ஒன்றிய அரசின் தொல்லியல் துறை (Archaeological Survey of India) இதுவரை 50–க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது.

## 3.10. கடந்த 2021–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்

2021 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஏழு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன:–

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகளான கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் – சிவகங்கை மாவட்டம்
2. ஆதிச்சநல்லூர் – தூத்துக்குடி மாவட்டம்
3. சிவகளை – தூத்துக்குடி மாவட்டம்
4. கொற்கை – தூத்துக்குடி மாவட்டம்
5. கங்கைகொண்டசோழபுரம் – அரியலூர் மாவட்டம்
6. மயிலாடும்பாறை – கிருஷ்ணகிரி மாவட்டம்
7. கொடுமணல் – ஈரோடு மாவட்டம்

அகழாய்வுகள் மட்டுமின்றி கூடுதலாக, புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி,

வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களிலும், பொருநை (தாமிரபரணி) ஆற்றுச் சமவெளி பண்பாட்டின் தொல்லியல் வளத்தினைக் கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் ஆக இரண்டு தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.11. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் தளங்கள் (கொந்தகை, அகரம் மற்றும் மணலூர்)

வைகை ஆற்றங்கரை நாகரிகத்தை முழுமையான முறையில் ஆய்வு செய்யும் பொருட்டு வாழ்விடம், ஈமக்காடு மற்றும் தொழிற் கூடங்கள் அமைந்த இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.12. கீழடி

கீழடி அகழாய்வில், பெரிய அளவிலான செங்கற் கட்டுமானங்கள், தமிழி எழுத்துப் பொறிப்பு கொண்ட பானை ஓடுகள், குறியீடுகள், அரிய கல்

மணிகள், ஆட்டக் காய்கள், வெள்ளி முத்திரைக் காசுகள், கங்கைச் சமவெளியைச் சார்ந்த வடக்கத்திய வழுவழுப்பான கருப்புநிற பானை ஓடுகள், தந்தத்தினால் ஆன பகடைக் காய்கள் மற்றும் சீப்பு ஆகியவை வெளிக் கொணரப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்றுள்ள செங்கற் கட்டுமானங்களும் தொல்பொருட்களும் மேம்பட்ட சமூகத்திற்கு உரியதாக இருப்பதோடு, இந்தியாவுடனும் இலங்கையுடனும் வணிக உறவுகளைக் கொண்ட ஒரு பெரிய நகரமாக அது சேவையாற்றியது என்பதைக் காட்டுகின்றன. கீழடியில் பெறப்பட்ட (Accelerator Mass Spectrometry) காலக்கணிப்பு தமிழி எழுத்துக்களின் காலத்தை கி.மு 6–ஆம் நூற்றாண்டுக்கு முன்னெடுத்துச் சென்றுள்ளது. கல்கத்தா பல்கலைக் கழகத்தின் நாணயவியல் அறிஞரான பேராசிரியர் சுஸ்மிதா பாசு மஜும்தார் அவர்கள் வெள்ளி முத்திரைக் காசினை குப்த–ஹர்டேகர் அட்டவணைத் தொகுப்பின்படி

மௌரியர்கள் காலத்திற்கு முந்தையது எனக் கருத்து தெரிவித்துள்ளனர்.

கீழடியில் நடந்த 7–ஆம் கட்ட அகழாய்வில் முக்கிய கட்டுமான அமைப்பு, உருண்டையான பானைகள், உலைகள், கால்நடை எலும்புகள், எண்ணற்ற இரும்புப் பொருட்கள், செப்புப் பொருட்கள், அரியவகை கற்களால் செய்யப்பட்ட மணிகள், கண்ணாடி மணிகள், சங்கு மணிகள் மற்றும் எடை அலகுகள், சுடுமண்ணால் ஆன முத்திரை, தமிழி (தமிழ்–பிராமி) எழுத்து பொறிக்கப்பட்டப் பானை ஓடுகள் மற்றும் குறியீடுகள் ஆகியவை கிடைக்கப் பெற்றுள்ளதன் வாயிலாக கீழடி, தொழிற்கூடம் மற்றும் வாழ்விடப் பகுதியாக அமைந்திருக்கக் கூடும் என்பதனை உறுதிப்படுத்துகிறது. எடை அலகுகள், முத்திரைகள், அரியவகை கற்களால் செய்யப்பட்ட மணிகள், வெள்ளி முத்திரைக் காசுகள் என பிற பகுதிகளின் தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் சங்ககால சமூகத்தின்

விரிவான வணிக நடவடிக்கைகளின் உண்மை நிலையினை இவை சுட்டிக்காட்டுகின்றன.

### 3.13. கொந்தகை

கொந்தகை முழுவதுமாக ஈமச்சின்னங்கள் நிறைந்த ஓர் இடமாக காணப்படுகின்றது. 30 முதுமக்கள் தாழிகளும், செவ்வண்ணம், சிவப்புப் பூச்சுப்பெற்றவை மற்றும் கருப்பு–சிவப்பு நிறங்களுடன் கூடிய 51 ஈமச்சடங்குப் பானைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### 3.14. அகரம்

அகரம் தொல்லியல் அகழாய்வுத் தளத்தில் மூன்று பருவங்களில் நடத்தப்பட்ட அகழாய்வில் பல்வேறு தொல் பொருட்கள் கிடைத்தன. அவற்றில், நமது கவனத்தை ஈர்ப்பவை நுண்கற்கருவிகளின் நிகழ்வு ஆகும். இதுதவிர, பல்வேறு வடிவங்கள் மற்றும் அலங்கரிக்கபட்ட கருப்பு–சிவப்பு நிற மட்கலன்கள், சிவப்புப் பூச்சுப்பெற்ற மட்கலன்கள்,

சிவப்புநிற மட்கலன்கள் மற்றும் சாம்பல் நிறப்பூச்சுப் பெற்ற மட்கலன்கள் ஆகியவையும் மணிகள், சுடுமண் உருவங்கள், சுடுமண் பொருட்கள், பல்வேறு வண்ணங்களில் கண்ணாடிப் பொருட்கள், அலங்கரிக்கப்பட்ட சங்கினால் ஆன பொருட்கள், செம்பு மற்றும் இரும்பினால் ஆன உலோகப் பொருட்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### 3.15. ஆதிச்சநல்லூர், தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் பொருநை (தாமிரபரணி) ஆற்றின் வடகரையில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. 1876 ஆம் ஆண்டில் பெர்லின் அருங்காட்சியகத்தைச் சார்ந்த டாக்டர் ஜாகோர் என்பவரால் முதன் முதலில் ஆதிச்சநல்லூரில் மிகப்பெரிய அளவிலான முதுமக்கள் தாழிகளைக் கொண்ட ஈமக்காடு கண்டறியப்பட்டது. அலெக்சாண்டர் ரே என்பவர், 1903 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான முதுமக்கள் தாழிகள் மற்றும் கிரேக்க நாகரிகத்தின் முக்கிய மையங்களில்

ஒன்றான மைசீனாவிற்கு இணையான தங்க நெற்றிப் பட்டங்களை கண்டுபிடித்தார். மேலும், பல வகையான விலங்கு வடிவங்களில் மூடியுடன் அமைந்த வெண்கலப் பொருட்கள், இரும்புப் பொருட்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மட்பாண்டங்களையும் கண்டறிந்தார். இவ்விடத்தில் மீண்டும் ஒன்றிய அரசின் தொல்லியல் ஆய்வுத் துறையால், 2003−2004 மற்றும் 2004−2005 ஆண்டுகளில் 600 சதுர மீட்டர் பரப்பளவில் மேற்கொண்ட அகழாய்வில் 160−க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் வெளிக் கொணரப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட இத்தகைய வியத்தகு பொருட்களும், வாழ்விடப் பகுதியில் வெளிக் கொணரப்பட்ட தொல் பொருட்களும் தமிழக வரலாற்றிலும் அதன் நாகரிகத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய இரு ஆண்டுகளில் ஆதிச்சநல்லூர் வளாகத்தில் வாழ்விடப் பகுதிகளில் தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளை மேற்கொண்டது. இந்த அகழாய்வுகளிலிருந்து வெளிக் கொணரப்பட்ட தொல் பொருட்கள், பொருநை ஆற்றங்கரையில் எஞ்சியிருந்த பண்டைய நாகரிகத்தின் சமூக, பொருளாதார, கலை, பண்பாடு, சூழலியல் மற்றும் உயிரியல், எழுத்தறிவு மற்றும் மொழி, அன்றாட வாழ்க்கை முறை ஆகியவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. ஈமக்காடு மற்றும் வாழ்விடப்பகுதி ஆகிய இரண்டு முக்கிய இடங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஏறத்தாழ, 905 தொல் பொருட்களும் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் சேகரிக்கப்பட்டன.

### 3.16. சிவகளை, தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் வட்டத்தில் சிவகளை என்னும் கிராமம் உள்ளது.

இவ்வூர் பொருநை(தாமிரபரணி) ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. சிவகளைக்கு மேற்கே 14 கி.மீ. தொலைவில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது.

பறம்புப் பகுதி மற்றும் வளப்பான்பிள்ளை திரடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பானை ஓடுகள், நுண் கற்கருவிகள் மற்றும் பிற தொல் பொருட்கள் இப்பகுதியின் தொல்லியல் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

சிவகளையில் ஈமக்காடு மற்றும் வாழ்விடப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில், 258 தொல் பொருட்களும் 48 ஈமத்தாழிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. ஓர் ஈமத்தாழியில் சேகரிக்கப்பட்ட மாதிரி (Accelerator Mass Spectrometry) காலப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதில், அதன் காலம் கி.மு.1155 என்று கண்டறியப்பட்டது.

இதன்மூலம் பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரை சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் 3200 ஆண்டுகளுக்கு முன்பே முதிர்ச்சியடைந்த பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதை தெளிவாக்குகிறது.

### 3.17. கொற்கை, தூத்துக்குடி மாவட்டம்

கொற்கை அகழாய்வில் கி.மு 5–ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய வழுவழுப்பான வடக்கத்திய கருப்புநிற மட்கல ஓடுகள் மற்றும் கருப்பு பூச்சுப் பெற்ற மட்கல ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்திய தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் டாக்டர் ராகேஷ் திவாரி மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஆர்.என்.சிங் ஆகியோர் கங்கை பள்ளத்தாக்கின் முத்திரையிடப்பட்ட காசுகள், வழுவழுப்பான வடக்கத்திய கருப்பு நிற மட்கலன்கள் மற்றும் கருப்புப் பூச்சுப் பெற்ற மட்கல ஓடுகள் கிடைப்பது, கி.மு 6–ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தென்னிந்தியா

இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடன் வணிகம் மூலம் நன்கு இணைக்கப்பட்டிருந்தது என்பதை தெளிவாகக் காட்டுகிறது என்று கருத்து தெரிவித்துள்ளனர். கி.மு.8 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே கொற்கை முக்கியமான துறைமுகங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம் என்பது முந்தைய அகழாய்வுகளில் இருந்து பெறப்பட்ட கரிம காலக் கணிப்பு மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுவரை, கண்ணாடி மணிகள், கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், சுடுமண் மணிகள், கல் மணிகள், வட்டச் சில்லுகள், சுடுமண் உருவங்கள், இரும்புப் பொருட்கள், செம்புப் பொருட்கள், சுடுமண்ணால் செய்யப்பட்டு துளையிடப்பட்ட குழாய்கள், செப்புக் காசுகள், ரோம் நாட்டு அரிட்டன் வகை மற்றும் சீன நாட்டு செலடன் வகை பானை ஓடுகள் ஆகிய தொல் பொருட்களும் செங்கல் கட்டுமானமும் கண்டறியப்பட்டுள்ளன. மொத்தம் 511 தொல் பொருட்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

### 3.18. கொடுமணல், ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வட்டத்தில், காவேரி ஆற்றின் துணை நதியான நொய்யல் ஆற்றின் வடக்கு கரையில் கொடுமணல் அமைந்துள்ளது. இது சென்னிமலைக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவில் ஈரோட்டில் இருந்து 40 கி.மீ. தென்மேற்கே அமைந்துள்ளது.

சங்க இலக்கிய நூலான பதிற்றுப்பத்தில் "கொடுமணம்" என்று அழைக்கப்பட்ட கொடுமணலானது, முக்கியத்துவம் வாய்ந்த வணிகம் மற்றும் தொழில்துறை மையமாக விளங்கியது என்று இலக்கியக் குறிப்புகளிலிருந்து தெளிவாகிறது. இப்பகுதியானது தொன்மை வாய்ந்த வணிகப் பெருவழியில் அமைந்துள்ளது. இது சேரனின் பண்டைய தலைநகரான கரூரை கிழக்கிலும், மேற்கில் பழம்பெரும் முசிறி துறைமுகத்துடனும் இணைக்கிறது.

அதிக எண்ணிக்கையிலான அரியவகை கல்மணிகள், வளையல்கள், வளையம், செம்பு மற்றும் வெள்ளியால் ஆன பொருட்கள், இரும்பு பொருட்கள், வட்டச் சில்லுகள், சுடுமண்ணால் ஆன பொருட்கள், எலும்பினால் ஆன பொருட்கள், குறியீடுகள் கொண்ட 779 பானை ஓடுகள், தமிழி (தமிழ்–பிராமி) எழுத்துப் பொறிப்புக் கொண்ட 35 பானை ஓடுகள் என ஆக மொத்தம் 3485 தொல்பொருட்கள் வாழ்விடப்பகுதிகளிலும் 26 இரும்புப் பொருட்கள் ஈமத்தளங்களிலும் கண்டெடுக்கப்பட்டன. இருபுறமும் கல் படிக்கட்டுகளுடன் கூடிய கிணறு ஒன்று முக்கிய கண்டுபிடிப்பாக உள்ளது.

### 3.19. கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகில் மாளிகைமேடு என்று அழைக்கப்படும் தொல்லியல் இடம் அமைந்துள்ளது. விழுப்புரம்–கும்பகோணம் நெடுஞ்சாலையில் ஜெயங்கொண்டம் இணைப்புச் சாலையிலிருந்து

மேற்கே 13 கி.மீ. தொலைவில் அரியலூர் – கும்பகோணம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த தொல்லியல் தளம் உட்கோட்டை கிராமத்திற்கு தென்மேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. மாளிகைமேடு, முதலாம் இராஜராஜ சோழனின் (கி.பி.985–1014) மகனான முதலாம் இராஜேந்திர சோழனின் (கி.பி.1012–1044) தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தின் அருகே அமைந்துள்ளது. சோழர்களின் அரண்மனை எச்சங்களை வெளிக் கொணர தொல்லியல் துறையால் அகழாய்வு நடத்தப்பட்டது. 36 செங்கற்கள் அடுக்குகளைக் கொண்ட நேர்த்தியான சீரமைப்பில் அழகுடன் அமைக்கப்பட்ட செங்கல் கட்டமைப்புகள் வெளிப்பட்டன. இவை தவிர இரும்பு ஆணிகள், இரும்புப் பொருட்கள், சீனநாட்டு செலடன் வகை பானை ஓடுகள், பானை ஓடுகள், ஒரு செப்பு நாணயம், கூரை ஓடுகள், வட்டச் சில்லுகள் போன்ற பல்வேறு

தொல்பொருட்கள் சேகரிக்கப்பட்டன. மொத்தம் 945 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### 3.20. மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம்

மயிலாடும்பாறை என்பது கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்டத்திலுள்ள தொகரபள்ளி கிராமத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஒரு சிறிய குன்று ஆகும். மயிலாடும்பாறை பகுதி நுண் கற்காலத்திலிருந்து வாழ்விடப் பகுதியாக இருந்து வருகின்றது என்பதை வெளிப்படுத்துகிறது. இங்கு வழுவழுப்பான கைக்கோடரியாக மாற்றம் செய்வதற்கு கற்களைத் தேய்ப்பதால் ஏற்பட்ட பள்ளங்கள்(grooves), பாறை உறைவிடங்கள் மற்றும் செவ்வண்ண பாறை ஓவியங்கள் மீது வெள்ளை வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இச்செவ்வண்ண ஓவியங்கள் புதிய கற்காலப் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்தது என்பதைக் குறிக்கின்றன. மேலும், நுண்கற்காலக் காலத்திலிருந்து வரலாற்று இடைக்காலம் வரை

தொடர்ச்சியான குடியேற்றங்கள் இருந்துள்ளது என்பது அகழாய்வுகள் மற்றும் கள ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. அகழாய்வுக் குழியின் கீழ்மட்டத்தில் புதிய கற்காலத்துடன் தொடர்புடைய கையால் செய்யப்பட்ட மட்பாண்டங்கள், சுட்ட மட்பாண்டங்கள், வழவழப்பான கைக்கோடரி மற்றும் செதில்கள் போன்ற பொருட்கள் இருந்துள்ளதை அகழாய்வு வெளிப்படுத்தியுள்ளது. புதிய கற்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இருந்து இரும்புக்காலத் துவக்கக் கட்டத்திற்கு பண்பாட்டு நிலையில் மாறியுள்ளதையும், உணவு சேகரிப்பாளர் நிலையிலிருந்து உணவு உற்பத்தியாளர் நிலைவரை மெதுவாகவும் சீராகவும் மாற்றம் பெற்றுள்ளதையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மயிலாடும்பாறை அகழாய்வுகள் மற்றும் வரட்டனப்பள்ளி மற்றும் கப்பலவாடியில் கண்டறியப்பட்ட அதன் தொடர்புடைய கண்டுபிடிப்புகள் புதிய கற்கால மக்கள் தங்கள் வேளாண்மை–கால்நடைவளர்ப்பு நடவடிக்கைகளை

மேற்கொண்டனர் என்பதைத் தெளிவாக நிரூபித்துள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறையில், 2021–ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகழாய்வில், இரும்பின் அறிமுகம் மற்றும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் இருந்து இரும்புக் காலத்தின் துவக்க காலத்திற்கு மாறியதற்கான சான்றினை வழங்கும் இரண்டு முக்கியமான Accelerator Mass Spectrometry காலக்கணிப்புகள் கிடைத்துள்ளன. மயிலாடும் பாறையில் இருந்து பெறப்பட்ட தற்போதைய இரண்டு Accelerator Mass Spectrometry காலக் கணிப்புகள், தமிழகத்தில் கி.மு இரண்டாயிரத்தில் இரும்புக் காலமும் இக்காலத்திற்கு முன்பே புதிய கற்கால காலகட்டமும் இருந்துள்ளதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் வலுசேர்க்கின்றன.

### 3.21. புதிய கற்கால இடங்களை கண்டறியும் கள ஆய்வு

தமிழ்நாட்டின் புதிய கற்கால இடங்களை அடையாளம் காண தொல்லியல் துறையானது சர்மா மரபுசார் கல்வி நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டின் கிழக்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில், புதிய கற்கால இடங்களை களஆய்வுகள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகளை நடத்தி வருகின்றது. பெருந்தொற்று கால கட்டங்களில் முதல் கட்டமாக, புதிய கற்கால இடங்களின் பெயர்கள், புவிசார் ஒருங்கிணை (geo–coordinates), புவியியல் – நிலவியல் (geographical–geological), நில உருவவியல் (geo–morphological) பற்றிய தகவல்கள் சேகரித்தல் போன்ற திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட தகவல்களை சேகரித்த பின்னர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில்,

வல்லுநர் குழு மூலம், இரண்டாம் கட்டப் பணி மேற்கொள்ளப்பட்டது. இக்கள ஆய்வுகள் தொல்லியல், நிலவியல் மற்றும் நில பரிணாமக் கூறுகளை உள்ளடக்கியது. கள ஆய்வில், கைக்கோடரி உற்பத்தி செய்யும் இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் கற்களை வழுவழுப்பான கைக் கோடரிகளாக உருவாக்கும்போது ஏற்பட்ட பள்ளங்கள் உள்ள தளங்களை மறு ஆய்வு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வு நோக்கங்களுக்காக பல மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் (Indhira Gandhi Centre for Atomic Research) உதவியுடன் தற்போது தொல்பொருட்கள் மற்றும் பாறை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

## 3.22. பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரை பள்ளத்தாக்குகளில் கள ஆய்வு

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்மேற்கு பள்ளத்தாக்கில் பொதிகை மலையில் பொருநை (தாமிரபரணி) ஆறு உருவாகிறது. பொருநை (தாமிரபரணி) ஆற்றுப் பள்ளத்தாக்கினை மேல், இடை, கடைப் பகுதிகளாக பிரித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆற்றின் மேற்பகுதி முதல் இந்நதி வங்காள விரிகுடாவில் கலக்கும் இடம் வரை 670 ஊர்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 160 தொல்லியல் இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இதில் பெருங்கற்காலச் சின்னங்கள் மற்றும் வாழ்விடங்களுடன், வீரக்கற்கள், பாறைகளில் கிண்ணம் போன்ற பதிவுகள், நுண்கற்காலக் கருவிகள், கல்வெட்டுகள், உதிரிச் சிற்பங்கள், மரபுச் சின்னங்கள் போன்ற பல்வேறு தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.

## 3.23. தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் – 2022

இம்மாநிலத்தில் 2022–ஆம் ஆண்டு, தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள, தொடரும் செலவினமாக வழங்கப்பட்டு வந்த ரூ.3 கோடி நிதி ஆதாரத்தினை ரூ.5 கோடியாக உயர்த்தி தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஏழு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகளான கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் – சிவகங்கை மாவட்டம்

2. சிவகளை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் பகுதிகள் – தூத்துக்குடி மாவட்டம்

3. கங்கைகொண்டசோழபுரம் – அரியலூர் மாவட்டம்

4. மயிலாடும்பாறை – கிருஷ்ணகிரி மாவட்டம்

5. வெம்பக்கோட்டை – விருதுநகர் மாவட்டம்

6. துலுக்கர்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்

7. பெரும்பாலை – தருமபுரி மாவட்டம்

அகழாய்வுகள் மட்டுமின்றி கூடுதலாக, புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் பொருநை (தாமிரபரணி) ஆற்றுச் சமவெளி பண்பாட்டின் தொல்லியல் வளத்தினைக் கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும் ஆக இரண்டு தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் 8–ஆம் கட்ட அகழாய்வு மற்றும் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் 2–ஆம் கட்ட

அகழாய்வுப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.02.2022 அன்று காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள். அதேபோன்று, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையிலும் திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டியிலும் அகழாய்வுப் பணிகள் 16.03.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. தொடர்ந்து நடைபெற்று வரும் இப்பணிகள் 2022 செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் நிறைவடையும்.

### 3.24. சங்க கால கொற்கை துறைமுகத்தின் கடலோரத்தில் முன்கள ஆய்வு

இடைச்சங்க கால பாண்டியர்களின் கொற்கை துறைமுகத்தை அடையாளம் காண இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் (Indian Maritime University) மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (National Institute of Ocean Technology) ஆகியவற்றுடன் இணைந்து ஒரு முதற்கட்ட முன்கள ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மொத்த

திட்டப்பணி மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 கோடியில் ரூ.0.64 கோடி நிதியினை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஏற்கவுள்ளது. இந்த ஆய்வினை 2022 ஏப்ரல்–மே மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**3.25. அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகள்**

அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் கால வரிசையை நிறுவ அறிவியல் அடிப்படையிலான காலக்கணிப்பு அவசியமாகும். தொல்லியல் பொருட்களின் கால வரிசையை முறையாக மறுகட்டமைப்பு செய்திடவில்லையெனில் தொல்லியல் ஆய்வுகள் பொருளற்றதாகி விடும். தற்பொழுது நடைபெற்று வரும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்கள் புகழ் பெற்ற ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் அறிவியல் நெறிமுறைகளின்படி பகுப்பாய்வுகள் செய்யப்படவுள்ளன.

பல்வேறு கட்டங்களில் கண்டெடுக்கப்படும் தொல்பொருட்களை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கங்களை அளிப்பதற்கு விரிவான தொழில் நுட்பங்கள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வுகள் தொல்லியல் ஆய்வுகளுக்கு அவசியமாகிறது. இத்தகைய ஆய்வுகள் தொல்லியல் தரவுகளை சரியான கால வரிசைப்படி வைப்பதற்கும், தொடர் பண்பாட்டு வளர்ச்சியினை புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

தொல்லியல் துறை தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar), காந்த அளவி மதிப்பாய்வு (Magnetometer Survey), ஆளில்லா வான்வழி வாகன மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle) போன்ற தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் களஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ள சரியான இடத்தை அடையாளம் காண்கிறது.

அறிவியல் பகுப்பாய்வுகளைப் பொறுத்தவரை மாநில தொல்லியல் துறை, பல்வேறு அறிவியல் நிறுவனங்களுடன் இணைந்து தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்றை அறிவியல் வரிசையில் மீண்டும் நிறுவி வருகிறது.

மகரந்தப் பகுப்பாய்வுகள் மற்றும் பைடோலித் ஆய்வுகள் மூலம் பண்டைய கால பருவநிலைகளை கண்டறிவதற்கு லக்னோவின் பீர்பால் சாஹ்ணி இன்ஸ்டிடியூட் ஆஃப் பேலியோ சயின்சஸ் மற்றும் ப்ரெஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆஃப் பாண்டிச்சேரி ஆகியவற்றுடன் இத்துறை இணைந்து செயல்படுகிறது; மனித மரபணுவைப் புரிந்து கொள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து aDNA பகுப்பாய்வு செய்யப்படுகிறது; இரும்பு, எஃகு மற்றும் உயர்நிலை–தகரம் கொண்ட வெண்கலத் தொழில் நுட்பத்தைப் புரிந்து கொள்வதற்காக, பெங்களூருவின் தேசிய மேம்பட்ட ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து உலோகவியல்

பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது; இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், கல்பாக்கம் மற்றும் புனே பல்கலைக் கழகத்தின் உதவியுடன் மூலப் பொருட்களின் ஆதாரங்களைப் புரிந்து கொள்வதற்காக மட்கலன்கள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சமூக அமைப்புகளின் தன்மையை அடையாளம் காண்பதற்கு புனே டெக்கான் கல்லூரியுடன் இணைந்து ஈமஎலும்பு எச்சங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

தனிச் சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாக பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் தொல்–தாவரவியல், மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பண்பாட்டு வரலாற்றினை

அறிவியலடிப்படையில் மாற்றி எழுதிட தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.26. தொல்லியல் அகழ்வைப்பகங்கள்

களஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல் பொருட்கள் பாதுகாக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின் கீழ் செயல்படும் 14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி / நாகப்பட்டினம் |
| 2) | ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் | பூம்புகார் / நாகப்பட்டினம் |
| 3) | கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம் | கங்கைகொண்ட சோழபுரம் / அரியலூர் |
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம் / இராமநாதபுரம் |

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு / ராணிப்பேட்டை |
| 6) | வரலாற்றுக்கு முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி / திருவள்ளூர் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை / மதுரை |
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 9) | மராத்தியர் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர் / கரூர் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர் / கோயம்புத்தூர் |
| 12) | குற்றாலம் அகழ்வைப்பகம் | குற்றாலம் / தென்காசி |
| 13) | திருக்கோவிலூர் அகழ்வைப்பகம் | திருக்கோவிலூர் / கள்ளக்குறிச்சி |
| 14) | தருமபுரி அகழ்வைப்பகம் | தருமபுரி / தருமபுரி |

**3.27. திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.09.2021 அன்று சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் சிவகளை, கொற்கை, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் அகழாய்வுகளில் பெறப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக திருநெல்வேலியில் அனைத்து நவீன வசதிகளுடன் பொருநை அருங்காட்சியகம் ரூ.15 கோடி நிதியில் அமைக்கப்படும் என அறிக்கை வெளியிட்டார்கள்.

இந்த வகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை போன்ற இடங்களில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் "பொருநை அருங்காட்சியகம்" என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட உள்ளன. ரூ.33.02 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியக வளாகம் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**3.28. கீழடியில் புதிய அகழ்வைப்பகம்**

சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி தொல்பொருட்களைக் காட்சிப்படுத்திட உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட 2019–2020 ஆம் ஆண்டு அரசால் ரூ.12.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிய அகழ்வைப்பகத்திற்கான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் ஏப்ரல் 2020–இல் தொடங்கப்பட்டு, இப்பணியானது 2022 மே மாதம் நிறைவடையவுள்ளது.

கீழடி அருங்காட்சியகத்திற்காக, 34 புதிய பணியிடங்களைத் தோற்றுவித்து (தொல்லியல் அலுவலர்–2, உதவி தொல்லியல் அலுவலர்–2, கண்காணிப்பாளர்–1, உதவியாளர்–1, இளநிலை உதவியாளர்–2, அருங்காட்சியகப் பாதுகாப்பு அலுவலர்–2 மற்றும் அருங்காட்சியகப் பராமரிப்பாளர்–24) இப்பணியிடங்களை நிரப்புவதற்குத் தேவையான

நிதி ரூ.1.58 கோடியினை 2021–2022–ஆம் ஆண்டு அரசு வழங்கியுள்ளது.

கீழடி புதிய அகழ்வைப்பகக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தவுடன் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளன.

**3.29. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் மேம்பாடு**

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகத்தினை மேம்படுத்திடவும் தொல் பொருட்களை காட்சிப்படுத்திடவும் ரூ.8.27 கோடிக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் அருங்காட்சியக நிதிநல்கை திட்டத்தின் கீழ் 80 : 20 என்ற பங்கீட்டு அடிப்படையில் (ஒன்றிய அரசு பங்கு 80% = ரூ.661.76 இலட்சம், மாநில அரசு பங்கு 20% = ரூ.165.44 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

### 3.30. கல்வெட்டியல்

கற்பாறைகள், தூண்கள், கோயிற்சுவர்கள், செப்பேடுகள், காசுகள், கற்கள், உலோகங்கள், பானைகள், மரங்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், சங்குகள் மற்றும் ஓவியங்கள் மீதான எழுத்துப் பதிவுகள் பற்றிய ஆய்வு கல்வெட்டியல் எனப்படுகிறது. இப்பதிவுகள் உள்ளத்தை வியக்க வைப்பதாகவும், தகவல் பொருந்தியதாகவும் விளங்குகிறது.

பண்டைய நாகரிகங்களின் வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான முதன்மைச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது. நீதி இயல், சமுதாயப் பண்பாட்டியல், இலக்கியம், தொல்லியல் ஆகியவற்றின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்த முதன்மை ஆவணச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது.

இந்தியக் கல்வெட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தமிழகக் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. கல்வெட்டுகளின் எண்ணிக்கை, செப்பேடுகளின் எண்ணிக்கை ஆகிய எல்லா பிரிவுகளிலும் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டுகளுக்கென்று தனிப்பிரிவு, 1996–ல் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய பணி தமிழகத்தில் கோயிற் சுவர்களிலும், கற்றூண்களிலும், கற்பலகைகளிலும், குகைத் தளங்களிலும், செப்பேடுகளிலும் மற்றும் பிறவற்றிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதாகும்.

தற்போது, மொத்தம் 38 மாவட்டங்களில் உள்ள 25,243 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, அவற்றின் மைப்படித்தாட்கள் இத்துறையில் பாதுகாப்பாக

வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. படியெடுக்கப்பட்டுள்ள 25,243 மைப்படிகளில் 13,201 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 8,599 கல்வெட்டுகள் 56 தொகுதிகளாக நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில், கல்வெட்டுகளை படியெடுத்தல், படித்து பொருள் விளக்கம் செய்து நூல் வடிவில் வெளியிடுதல் போன்ற சீரிய பணிகளை மேற்கொள்ள ரூ.2 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்து ஆண்டு காலத்திற்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.40 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. படிக்கப்பட்ட கல்வெட்டுகள் "தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்" என்ற தலைப்பில் மாவட்ட வாரியாக பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை மேற்கொள்ள 15 நிபுணர்கள் நியமிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 3,000 கல்வெட்டுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை 4,000 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1,279 கல்வெட்டுகள் நூல் வடிவில் 6 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இதுவரை படியெடுக்கப்படாத கல்வெட்டுகளைப் படியெடுக்கவும், புதிய கல்வெட்டுகளைக் கண்டறியவும் ஐந்து கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2021-2022 ஆம் ஆண்டு 216 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

**3.31. தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்**

தொல்லியல் துறையில் இயங்கி வந்த கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம், 2020-2021-ஆம் ஆண்டு முதல் "தொல்லியல் நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு

மறுசீரமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 2021–2022–ஆம் ஆண்டில், "தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம், இத்துறை தலைமை அலுவலகத்தில் கல்வியியல் மற்றும் பயிற்சி நிறுவனமாக 1974–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

"தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்", 2020–2021–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 20 மாணவர்களுக்கு ஈராண்டு தொல்லியல் முதுநிலைப் பட்டய படிப்பினை நடத்தி வருகின்றது. முதுகலையில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் எழுத்து மற்றும் நேர்முக தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

2021– 2022–ஆம் ஆண்டு முதல், தமிழ், இந்திய வரலாறு, வரலாறு, பண்டைய வரலாறு மற்றும்

தொல்லியல், வரலாறு மற்றும் தொல்லியல் ஆகிய பாடங்களில் முதுகலையில் தேர்ச்சி பெற்ற 10 மாணவர்களுக்கு ஈராண்டு கல்வெட்டியல் முதுநிலைப் பட்டய படிப்பும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்படிப்புகளில் நான்கு பருவத் தேர்வுகள் என ஒவ்வொரு பருவத் தேர்வுக்கும் 6 தாட்கள் உள்ளன. மொத்தம் 24 தாட்கள் கொண்ட இந்தப் படிப்புகளில் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் சார்ந்த அனைத்துப் பாடங்களும் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. பல்வேறு தொல்லியல்சார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.5,000/- பயிலுதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

## 3.32. கற்தொழில்நுட்பங்கள்(lithic technology) பற்றிய தேசியக் கருத்தரங்கம்

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் சுற்றுலாத் துறையுடன் இணைந்து லித்திக் டெக்னாலஜி எனப்படும் கற்தொழில்நுட்பம் குறித்த தேசிய அளவிலான பயிலரங்கம் 05.03.2022 முதல் 07.03.2022 வரை நடத்தப்பட்டது. இதில் இந்தியாவைச் சேர்ந்த 10 ஆய்வாளர்கள் மற்றும் வல்லுநர்கள் பங்கேற்று மாணவர்களின் நலனுக்காக நேரடி களப்பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் கோயம்புத்தூரில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் மாநிலத் தொல்லியல் துறை முதுநிலைப் பட்டய படிப்பு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## 3.33. தமிழ்நாட்டிலுள்ள பாறை ஓவியங்கள்

தமிழ்நாட்டின் பாறை ஓவியங்களை பெட்ரோகிரா ஃப் மற்றும் பெட்ரோகிளிஃப் என இரண்டு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. பாறை ஓவியங்கள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- இயற்கை குகைத்தளங்கள்
- பெருங்கற்கால கற்பதுக்கைகள்
- வரலாற்றுக் காலத்தில் மனிதனால் வெட்டப்பட்ட குகைத்தளங்கள்

2. பாறைச் சுவடுகள் மற்றும் வெட்டுக் கீறல்கள்

தொல்லியல் துறை தமிழ்நாட்டில் உள்ள பாறை ஓவியங்களை ஆவணப்படுத்திட, தொல்லியல் ஆய்வாளர், மானுடவியலாளர், புவியியலாளர், நாட்டுப்புறவியலாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 8 உறுப்பினர்கள் கொண்ட குழுவினை அமைத்துள்ளது. இக்குழுவானது கீழ்காணும் இடங்களில் ஆய்வு செய்துள்ளது:–

1. கருக்கியூர், நீலகிரி மாவட்டம்
2. சிறுமலை, திண்டுக்கல் மாவட்டம்
3. உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்
4. விழுப்புரம் மாவட்டத்தில் 6 இடங்கள்
5. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30 இடங்கள்

இவ்வாய்வின் போது, பாறை ஓவியங்களில் வேட்டைச் சமூகம், போர்க் காட்சிகள், கால்நடை பராமரிப்பாளர்கள், விலங்கின் மீது சவாரி செய்பவர் என பல்வேறு கருப் பொருள்களும் செவ்வண்ணம் மற்றும் வெள்ளை நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டன.

### 3.34. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

ஓலைச்சுவடி என்பது காகிதம், பட்டை, துணி, உலோகம், பனை ஓலை அல்லது அறிவியல், வரலாற்று அல்லது அழகியல் மதிப்பு மிக்க பொருட்களில் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் அடங்கியவை. ஓலைச் சுவடிகள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு மொழிகளிலும் வரிவடிவங்களிலும் காணப்படுகின்றன.

வரலாற்று நிகழ்வுகள் அல்லது செயல்முறைகள் குறித்த நேரடி தகவல்களை வழங்கும் பாறைகள், நிறுவனங்கள், வருவாய் பதிவுகள் போன்ற வரலாற்று

பதிவுகளிலிருந்து ஓலைச் சுவடிகள் வேறுபடுகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மைய உருவாக்கம் 1861 ஆம் ஆண்டு முதல் ஒரு தனித்துவமான வரலாற்று பின்னணியைக் கொண்டுள்ளது. இந்த நூலகம் கர்னல் கொலின் மெக்கன்சி, சி.பி.பிரவுன் மற்றும் பேராசிரியர் பிக்போர்டு ஆகியோரின் சேகரிப்புப் படைப்புகளால் உருவாக்கப்பட்டு, பின்னர், தமிழக அரசால் ஓலைச் சுவடிகள் கூடுதலாக சேகரிப்பட்டும் வருகிறது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக கட்டடத்தில் ஏழாவது தளத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் கணிதம், வானவியல், சித்த

மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகளில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில், 72,748 அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஓலைச் சுவடிகளை அதிக கவனமுடன் பாதுகாக்க புதிதாக 50 மர அலமாரிகள் வாங்கப்பட்டுள்ளன.

இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக ஓலைச் சுவடிகளை அளித்து வருகின்றனர். நாகர்கோயில் மாண்பமை நீதிமன்றம் 43 பெட்டிகளில் ஓலைச் சுவடிகளை இந்நூலகத்திற்கு வழங்கியுள்ளது. இதுவரை, 21,00,000 ஓலைச் சுவடி பக்கங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3500 ஓலைச் சுவடிக் கட்டுகளின் 5,00,000 மின்னனுப் பக்கங்கள்

www.tnarch.gov.in எனும் தொல்லியல் துறையின் வலைத்தளத்தில் கிடைக்கின்றன.

### 3.35. மாநில சுவடிக் குழுமம்

மாநிலத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் அவற்றை முறையாக மின்பதிப்பாக்கம் செய்திடவும் மாநில சுவடிக் குழுமம் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு 2019–2020 ஆம் ஆண்டு தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியது.

இத்திட்டத்தின் கீழ், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் ஒரு தனித்துவமான சுவடி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் உள்ள 1,00,000 ஓலைச் சுவடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும்,

இதன் மூலம் இச்சுவடிகள் முறையாக பாதுகாக்கப்பட்டு மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டு எதிர்கால தலைமுறையினரின் நலனுக்காக ஆவணப்படுத்தப்படும். ஐந்து மண்டலங்களின் மூலம் மாநில சுவடிக் குழுமம் செயல்படுத்தப்பட்டு, பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இம்மாநில சுவடிக் குழுமத்தின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சர்வதேச தரத்துடன் கூடிய தரக்குறியீட்டுடன் அட்டவணைப் படுத்தப்பட்டு, இறுதியாக அறிஞர்கள் மற்றும் பொது மக்களின் நலனுக்காக இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளன.

### 3.36. சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre)

புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் "தேசிய சுவடிக் குழுமம்" [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச் சுவடிகளின்

விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச் சுவடிகளைச் சேகரித்து, அவற்றினை குறுந்தகடுகளில் மின்னணு வடிவில் பதிவு செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் "சுவடிகள் வள ஆதார மையமாக" (Manuscript Research Centre) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 66,110 சுவடிகள் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டு, புதுதில்லியிலுள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

**3.37. முக்கியச் செயல்பாடுகள் 2021– 2022**

- உலக மரபு வார விழாவினை (2021 நவம்பர் 19–25) கொண்டாடும் வகையில் இத்துறையின் அனைத்து அகழ்வைப்பகங்கள் மற்றும் சார் அலுவலகங்கள் வாயிலாக தொல்லியல் மற்றும்

கல்வெட்டியல் குறித்தான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பணிப்பட்டறைகள், போட்டிகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள் போன்றவை அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர் சமுதாயம் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நிகழ்த்தப்பட்டன.

- கீழடியில் நடைபெற்றுவரும் 7–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகளையும் கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் சிறப்புக் கண்காட்சியினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.10.2021 அன்று பார்வையிட்டார்கள். பொதுமக்கள் பயனடையும் வகையில் இச்சிறப்புக் கண்காட்சி 10 நாட்கள் நடைபெற்றது.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பெரு நிறுவன சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) செயல்பாடுகள் திட்டத்தின் நிதி உதவியுடன் 16.02.2022 முதல் 06.03.2022 வரை நடைபெற்ற 45–வது, சென்னைப் புத்தகக் கண்காட்சியில், 5000 சதுர அடியில் ஏற்பாடு

செய்யப்பட்டிருந்த தனித்துவமான பொருநை ஆற்றங்கரை நாகரிக கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டது. ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய அகழாய்வுகளில் வெளிக் கொணரப்பட்ட கட்டுமானங்களின் மாதிரிகள், தொல் பொருட்கள் மெய்நிகர் காட்சியுடன் கூடிய விரிவான விளக்கங்களுடன் பொதுமக்கள் பயனுறக் காட்சிப்படுத்தப்பட்டன. இக்காட்சிக் கூடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.02.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

- 17.03.2022 முதல் 27.03.2022 வரை நடைபெற்ற ஐந்தாவது பொருநை நெல்லை புத்தகக் கண்காட்சியில் பொதுமக்கள் பயனடையும் வகையில் ஒரு சிறப்புக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டது. இக்கண்காட்சி பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.
- ஐந்தாவது பொருநை நெல்லை புத்தகக் கண்காட்சியில் 19.03.2022 அன்று "தமிழ்நாட்டுக்

கல்வெட்டுகள்" என்னும் தலைப்பிலான ஆறு கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடப்பட்டன.

- 31.12.2021 அன்று கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பு தொடங்கி வைக்கப்பட்டது.

### 3.38. முடிவுரை

தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கம் அருகே உள்ள அத்திரம்பாக்கத்தில் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தோன்றினான் என்று சான்றுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது. 15 இலட்சம் ஆண்டுகால வரலாற்றை மறுசீரமைப்பது இத்துறையின் முக்கிய மற்றும் சவாலான பணிகளில் ஒன்றாகும். தமிழர்களின் கடல்சார் பண்பாட்டினைப் புரிந்துகொள்வதற்காக, கடல்மட்டத்தின் ஏற்ற இறக்கங்கள், ஆறுகளின் இடம்பெயர்வு, தொல்லியல், மரபு வழி கடற்பயணம் மற்றும் படகுகட்டும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கண்டறிவதற்காக,

தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு அறிவியல் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட இத்துறை மேலும் முயற்சித்து வருகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் கடல்வழியாக எகிப்து, அரேபிய தீபகற்பம், தாய்லாந்து, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் தீவிர வணிகம் மேற்கொண்டிருந்தனர்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகள் குறித்த நமது புரிதலை, அறிவியல் வழியில் துல்லியமாக காலக்கணிப்பு மற்றும் பன்முக அணுகுமுறைகள் மூலம் முன்னெடுத்துச் செல்வதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. முறையான களஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு கிடைக்கப் பெற்றுள்ள தொல்பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் நமது வளமான மற்றும் ஆற்றல்மிகு பண்பாட்டினை கண்டுபிடிப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும்

மிகப்பெரிய வாய்ப்பினை வழங்குகின்றன. எவ்வித சார்புமின்றி தங்கள் மரபினை பெருமையுடனும் பெருமிதத்துடனும் புரிந்து கொள்வதற்காவும், தற்போதைய அறிவை மேலும் மெருகூட்டவும், தெளிவுபடுத்தவும் அறிஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முடிவு சார்ந்த தொல்லியல் கண்டுபிடிப்புகள் அளிக்கப்படுகின்றன.


**தங்கம் தென்னரசு**
தொழில்துறை அமைச்சர்

## இணைப்பு

| வ. எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | கொற்கை | தூத்துக்குடி | 1968–69<br>2020–21 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 2 | பாஞ்சாலங்குறிச்சி | தூத்துக்குடி | 1968–69 | நவீன காலம் |
| 3 | வசவசமுத்திரம் | காஞ்சிபுரம் | 1969–70 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 4 | ஆனைமலை | கோயம்புத்தூர் | 1969–70 | பெருங்கற்காலம் |
| 5 | பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970–71 | இடைக் காலம் |
| 6 | கரூர் | கரூர் | 1973–74<br>1994–95 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 7 | பனையகுளம் | தருமபுரி | 1979–80 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 8 | போளுவாம்பட்டி | கோயம்புத்தூர் | 1979–80<br>1980–81 | இடைக் காலம் |
| 9 | கோவலன்பொட்டல் | மதுரை | 1980–81 | பெருங்கற்காலம் |
| 10 | தொண்டி | இராமநாதபுரம் | 1980–81 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 11 | கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980–81<br>1986–87<br>2008–09<br>2020–21<br>2021–22 | இடைக் காலம் |
| 12 | கண்ணனூர் | திருச்சி | 1982–83 | இடைக் காலம் |
| 13 | குறும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984–85 | இடைக் காலம் |
| 14 | பழையாறை | தஞ்சாவூர் | 1984–85 | இடைக் காலம் |
| 15 | அழகன்குளம் | இராமநாதபுரம் | 1986–87<br>1990–91<br>1992–93<br>1994–95<br>1996–97<br>2014–15<br>2016–17 | வரலாற்றுத் தொடக்க காலம் |

| வ. எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 16 | திருக்கோவிலூர் | விழுப்புரம் | 1992–93 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 17 | கொடுமணல் | ஈரோடு | 1992–93<br>1996–97<br>2019–20<br>2020–21 | பெருங்கற்காலம் & வரலாற்றுத் தொடக்க காலம் |
| 18 | சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992–93<br>1994–95 | இடைக் காலம் |
| 19 | படவேடு | திருவண்ணா மலை | 1992–93 | இடைக் காலம் |
| 20 | திருத்தங்கல் | விருதுநகர் | 1994–95 | நுண்கற்காலம் |
| 21 | பூம்புகார் | நாகப்பட்டினம் | 1994–95<br>1997–98 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 22 | மாளிகைமேடு | கடலூர் | 1999–2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 23 | தேரிருவேலி | இராமநாதபுரம் | 1999–2000 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 24 | மாங்குடி | திருநெல்வேலி | 2001–02 | நுண்கற்காலம் |
| 25 | பேரூர் | கோயம்புத்தூர் | 2001–02 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 26 | ஆண்டிபட்டி | திருவண்ணா மலை | 2004–05 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 27 | மோதூர் | தருமபுரி | 2004–05 | புதியகற் காலம் |
| 28 | மரக்காணம் | விழுப்புரம் | 2005–06 | இடைக் காலம் |
| 29 | பரிக்குளம் | திருவள்ளூர் | 2005–06 | பழைய கற்காலம் |
| 30 | நெடுங்கூர் | கரூர் | 2006–07 | பெருங்கற்காலம் |
| 31 | மாங்குளம் | மதுரை | 2006–07 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 32 | செம்பியன்கண்டியூர் | நாகப்பட்டினம் | 2007–08 | பெருங்கற்காலம் |
| 33 | தரங்கம்பாடி | நாகப்பட்டினம் | 2008–09 | நவீன காலம் |
| 34 | இராஜாக்கள் மங்கலம் | திருநெல்வேலி | 2009–10 | இடைக் காலம் |

| வ. எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 35 | தலைச்சங்காடு | நாகப்பட்டினம் | 2010–11 | இடைக் காலம் |
| 36 | ஆலம்பரை | காஞ்சிபுரம் | 2011–12 | நவீன காலம் |
| 37 | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | 2013–14<br>2014–15 | இடைக் காலம் |
| 38 | உக்கிரன்கோட்டை | திருநெல்வேலி | 2014–15 | இடைக் காலம் |
| 39 | பட்டறைபெரும்புதூர் | திருவள்ளூர் | 2015–16<br>2017–18 | கடைக் கற்காலம் |
| 40 | கீழடி | சிவகங்கை | 2017–18<br>2018–19<br>2019–20<br>2020–21<br>**2021–22** | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 41 | ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 2019–20<br>2020–21 | இரும்புக் காலம் |
| 42 | சிவகளை | தூத்துக்குடி | 2019–20<br>2020–21<br>**2021–22** | இரும்புக் காலம் |
| 43 | மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி | 2020–21<br>**2021–22** | புதிய கற்காலம் |
| 44 | வெம்பக்கோட்டை | விருதுநகர் | **2021–22** | நுண்கற்காலம் |
| 45 | துலுக்கர்பட்டி | திருநெல்வேலி | **2021–22** | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 46 | பெரும்பாலை | தர்மபுரி | **2021–22** | வரலாற்றுத் தொடக்க காலம் |




தொல்லியல் துறையால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், கீழடி அகழாய்வுத் தளத்தினை 29.10.2021 அன்று பார்வையிட்டார்கள்.

191




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், கீழடி அகழாய்வு குறித்த சிறப்புக் கண்காட்சியினை 29.10.2021 அன்று பார்வையிடும் போது தொல்பொருட்களை கூர்ந்தாய்வு செய்தார்கள்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழடி மற்றும் கங்கைகொண்டசோழபுரம் அகழாய்வுப் பணிகளை 11.02.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 45-ஆவது சென்னை புத்தக கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த பொருநை சிறப்புக் கண்காட்சியினை 16.02.2022 அன்று தொடங்கி வைத்து, தொல்பொருட்களைப் பார்வையிட்டார்கள்.




மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலைப் பட்டய வகுப்பினை 31.12.2021 அன்று தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் 5-ஆவது பொருநை நெல்லை புத்தகக் கண்காட்சியினை 19.03.2022 அன்று பார்வையிட்டு, அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த அகழாய்வு மாதிரிகளை கூர்ந்து நோக்கினார்கள்.

201





விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் :

1. கண்ணாடி மற்றும் அரிய வகை கல்மணிகள் 2. நூல் நூற்கும் தக்களிகள்.




விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள்:

1. நுண்கற்கருவிகள், 2. சங்கு வளையல்கள்.







சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் இடங்களில்
கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் : 1. சங்கு வளையல்கள் 2. தந்தத்தினாலான பகடை.




சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொல்லியல் இடங்களில்
கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் : 1. படிக மணிகள்   2. எலும்பினாலான முனைகள்.






திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்பட்டி அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள்: 1. கண்ணாடி மற்றும் அரிய வகை கல்மணிகள் 2. மைக்கோதிக் கோல் (ஆன்டிமணி கம்பி) மற்றும் உடைந்த செப்பு வளையம்.

211



செங்கல்பட்டு மாவட்டம், அனந்தமங்கலம் கிராமத்தில் அண்மையில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்ட சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள்.

213

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.